விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 18 வெள்ளிக்கிழமை (04.12.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 350







# திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு சரத் பொன்சேகா இந்தியா பயணம்

## இன்று மாலை நாடு திரும்புகிறார்

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தின் விஷேட அழைப்பின் பேரில் எதிர்க்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன் சேகா நேற்று முன்தினம் இரவு இந்தியாவுக்கு சென்றுள் ளார். இந்தியா சென்றுள்ள அவர் அங்கு முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவார் எனவும் தெரிவிக்கப் பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## நலன்புரி நிலையங்களுக்குச் செல்ல ஊடகங்களுக்கு அனுமதி கிடைக்கும்

(வவுனியா)

விசேட வேண்டுகோளின் அடிப்படையில் ஊடகங்கள் இடம் பெயர் முகாம்களுக்குச் செல்ல அனுமதிவழங்கப்படுமென அனர்த்த நிவாரண மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் தனிப்பட்ட ரீதியில் வேண்டுகோள் விடுக்க வேண்டும் எனவும் இந்த வேண்டு கோளுக்கு அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் இடம் பெயர் முகாம்களை பார்வையிட அனுமதியளிக்கப்படுமெனவும் அவர்குறிப் பிட்டுள்ளார்.

முன்கூட்டிய வேண்டுகோளுக்கு இணங்க ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் இடம் பெயர் முகாம்களுக்குச்செல்ல அனுமதி வழங் கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## முக்கிய பிரமுகர்களுக்கான பாதையை பொன்சேகா பயன்படுத்த அனுமதியில்லை

(கொழும்பு)

இந்தியாவின் அவசர அழைப்பைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு இந்தியாவுக்கு புறப்பட்டுச்சென்ற ஜெனரல் சரத்பொன்சேகா விற்கு முக்கிய பிரமுகர்கள் பயன்படுத்தும் பாதையை பயன்படுத்த அரசு அனுமதிக்க வில்லையென விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அவை மேலும் தெரிவித் துள்ளதாவது, இந்தியாவின் அவசர அழைப் பின் பெயரில் ஜனாதிபதி பொது வேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகா நேற்றுமுன்தினம் அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந் தியா சென்றுள்ளார்.

இந்தியா செல்வதற்கு விமான நிலையத் தை சென்றடைந்த (16ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் உறுதித்தன்மையை சீர்குலைக்க மேற்குலகம் முயற்சி

### அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் அரசியல் உறுதித்தன் மையை சீர்குலைப்பதற்கு மேற்குலகம் முயற்சிகளை மேற்கொண்டுவருவதாக சிறி லங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலா ளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறி சேனா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது, இலங்கை அரசியல் உறுதித்தன் மையை சீர்குலைப்பதற்கு பெரும்பாலான மேற்குலக நாடுகள் முயன்று வருகின்றன.

கடந்த ஜனவரி (16ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மருந்துகளின் இறக்குமதிக்குத் தடை

(கொழும்பு)

இலங்கைக்கு மருந்துகளை ஏற்றுமதி செய்யும் சில இந்திய நிறுவனங்களுக்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்துள்ளது. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப் பட்ட சில மருந்துகளின் தரம் குறைவாக இருந்த தாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்ட தாக இலங்கை அரசின் சுகாதாரத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரி வித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்கு அளிக்கும் வாக்கு நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும்!

### மனோ கணேசன் எம்.பி. அறிவிப்பு



(கொழும்பு)

தென்னிலங்கை முழுக்க வாழும் தமிழ் மக்கள் ஆட்சிமாற்றத்திற்காக எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக நியமிக்கப்பட விருக்கும் சரத் பொன் சேகாவிற்கு எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வாக் களிக்க வேண்டும். வடக்கின் ஐந்து தேர்தல் மாவட் டங்களில் வாழும் தமிழ் மக்கள் தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் நடக்கும் பேச்சுவார்த்தை களை அடுத்து இறுதி முடிபு தேர்தல் நியமன தினத் திற்கு முன் அறிவிக் (16ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத்தூதுவர்–ஜனாதிபதி அலரிமாளிகையில் சந்திப்பு

(கொழும்பு)

இந்தியத் தூதுவர் அசோக் கே காந்திற் கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடை யில் விசேட சந்திப்பொன்று இடம் பெற்றுள் ளது.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது இந்திய அரசாங்கத்தின் முக்கிய செய்தி ஒன்று மகிந்த ராஜபக்ஷ விற்கு இந்திய தூதுவரால் கையளிக்கப்பட்டதாக தக வல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலானது இந் தியாவின் எதிர்கால அரசியல் நலன்கள் மற் றும் பிராந்திய வல்லாதிக்கம் ஆகியவற்றை தீர் மானிக்கும்களமாக (16ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரிய உதவியாளர்கள் ஆர்ப்பாட்டம் பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டு வீச்சு

### கொழும்பில் நேற்றுமாலை சம்பவம்

(கொழும்பு)

ஆசிரிய உதவியாளர்கள் கொழும்பில் நேற்று மாலை நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் அதிக அழுத்தம் கொண்ட நீர்ப் பிரயோகம் என்பவற்றை மேற்கொண்டனர்.

தம்மை ஆசிரியர் சேவையில் இணைத் துக்கொள்ளுமாறு கோரி அலரிமாளிகை நோக்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர் கள் செல்ல முற்பட்டதை அடுத்து அதனைக் கட்டுப்படுத்துவதற்காக அதிக அழுத்தம் கொண்ட நீர் (16ஆம் பக்கம் பார்க்க)

## இராமாவில் நலன்புரி முகாமிலிருந்து மக்கள் வெளியில் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் இராமாவில் நலன்புரி முகா மில் தங்கியுள்ள மக்கள் சுதந்திரமாக வெளி யில் சென்றுவர நேற்றுமுதல் அனுமதியளிக் கப்பட்டுள்ளது.

போரினால் இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாமில் தங்கியிருந்த மக்கள் கடந்த முதலாம் திகதியிலிருந்து சுதந்திரமாக வெளி யில் சென்றுவர அனுமதியளிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று இராமாவில் நலன் புரி முகாமில் தங்கியிருந்த மக்கள் சுதந்திர மாக வெளியில் (16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். உற்பத்தி பொருள்களின் ஏற்றுமதி தொடர்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வது தொடர்பிலான மாநாடு நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் க.கணேஷ் தலைமையில் நடைபெற்றது.

இம் மாநாடு தொடர்பில் யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்ததாவது, யாழ்.உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்வது தொடர்பில் ஆராய்வதற்கு ஏற்றுமதி அமைச்சின் அதிகாரி கள் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தனர்.

இக்குழுவினர் நேற்று மாலை யாழ். மாவட்ட செயலகத்தில் (16ஆம் பக்கம் பார்க்க)

# க.பொ.த.(உ/த) பெறுபேறுகள்

யா/வரணி மகா வித்தியாலயம்.

மு.கசேந்தினி (3ஏ),க.கஷந்தினி (3ஏ), இ.யசோதா (3ஏ), ஸ்ரீ.யசோதா (2ஏபி), வை.தியாகரன்(2ஏபி), செ.துஷ்யந்தினி (2ஏபி), யோ.தர்சினி (2ஏபி), ச.சியாமளன் (ஏபிசி), த.தர்சிஸ் (ஏபிசி), சி.தமிழினி (ஏபிசி), கோ.புஸ்பராணி (ஏபிசி), சி.ஜெதர்சினி (ஏபிசி), சி.மேனகா (ஏபிசி), சு.சரணியா (3பி), த.ஜென்சிகா (3பி), வி.வினோதினி (3பி).

யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.

ச.சஞ்சயன் (ஏபிசி),யோ.வினித்தா (3பி), சோ.மயூரி (ஏ2சி),வி.பிரசாத் (ஏ2சி), சி.கரிகாசினி (2ஏசி).

யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.

வ.சசிரேகா (ஏ2சி),வி.அஜந்தா (2பிசி), ப.கிருபாதயன் (பி2சி), இ.கிரிசாந் (பி2சி), ப.சுகிதா (பி2சி), வ.அதிசயராஜன் (3சி).

யா/வட்டு இந்துக் கல்லூரி

கணிதப் பிரிவு

சோ.சிவரூபன (3ஏ).

உயிரியல் பிரிவு

ச.பாமினி (பி2சி).செ.டுவாரகா (பி2சி).

வர்த்தகப் பிரிவு

க.நகோமி (3ஏ),தெ.மிதுலா (3பி).

கலைப் பிரிவு

ப.பார்த்தீபன் (2ஏசி), ம.நிஜகரன் (2ஏசி), ஞா.சுபகரி (ஏபிசி), ந.பிரதீபா (ஏபிசி), ச.சரீனா (ஏபிசி), க.ஞானசவுந்தரி (ஏபிசி), ந.உஷா நந்தினி (2பிசி), இ.அஸ்வினி (2பிசி),பு.நிர்மலா (2 ஏசி), ச.சங்கீதா (3பி),செ.கிருசாந்தன் (ஏ2சி),ப.தவப்பிரியன் (2பிசி),வ.வாகீசன் (2பிஎஸ்),வி.மிரிசியா (2பிசி),க.பிரசாளினி (ஏ2சி).

# பரீட்சைப் பணியாளர்களுக்கு அறிவுறுத்தல் கூட்டம்


பிராந்திய சேகரிப்பு நிலையம், யாழ்ப்பாணம்-II இற்குட்பட்ட வவலிகாமம் கல்வி வலயம், வடமராட்சிக் கல்வி வலயம், கோப்பாய் கல்விக் கோட்டம் என்பவற்றைச் சேர்ந்த பரீட்சைக் கடமையில் ஈடுபடும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் திங்கட்கிழமை காலை 9.30மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும். பரீட்சைக் கடமைக்கு நியமிக்கப்பட்ட இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள் தவறாது உரிய நேரத்திற்கு இக் கூட்டத்திற்கு சமுக மளிக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (சு)

# மீளக் குடியேறிய மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு இம்மாதம் நடைபெறவுள்ள க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை இன்று வெள்ளிக் கிழமை காலை 11 மணியிலிருந்து அந்தந்த பாடசாலை அதிபர்களும்,

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக் கான அனுமதி அட்டைகளை பரீட்சார்த்திகள் நாளை சனிக்கிழமை காலை 10மணியிலிருந்து 12மணி வரை யாழ்.வலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஒ)



யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் ஆசிரியர் கல்வி தொடர்பான நிலைமைகளை பார்வையிடுவதற்காக கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு வருகைதந்த போது கலாசாலை அதிபர் மலர் சின்னையா, தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதம பணிப்பாளர் லிலானி அமரசிங்காவுக்கு மாலை அணிவித்து வரவேற்பதையும், அருகில் கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விப் பிரிவின் பிரதம ஆணையாளர் வை.ஏ.என்.டி. யாப்பா, ஆசிரியர் கல்வி நிர்வாகப் பிரிவின் பணிப்பாளர் டி.எம்.ஏ.ஜே.டி சில்வா, ஆசிரிய கல்விப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.முரளிதரன், வவுனியா கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கே.பேர்ணாட் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# தேசிய மெய்வன்மை அலுவலர்களாக வடக்கைச் சேர்ந்த நால்வர் நியமனம்



(யாழ்ப்பாணம்)

இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஒக்டோபர் மாதம் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச மெய்வல்லுனர் சங்கத்தின் தொழில் நுட்ப அலுவலர் தரம் I பயிற்சி நெறியை பூர்த்தி செய்து அதற்கான பரீட்சையில் சிறப்புச் சித்தியடைந்ததன் மூலம் வட பகுதியைச் சேர்ந்த நால்வர் தேசிய மெய்வன்மை அலுவலர்களாக தகைமை பெற்றுள்ளார்கள்.

யாழ்ப்பாணம் மெய்வல்லுனர் தொழில் நுட்ப அலுவலர்களான செல்வி ராதை அருளம்பலம், பத்மநாதன் முருகவேல், மரியதாஸ் போர்ட்டி பனிஸ்டர், தம்பிராஜா சிவசோதி ஆகியோரே மேற்படித் தகைமையை பெற்றவர்கள் ஆவர்.

இவர்களுக்கு சர்வதேச மெய்வல்லுனர் சங்கத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் டிசம்பர் 6ஆம் திகதி கொழும்பில் உள்ள தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தில் நடைபெறும் நிகழ்வில் கையளிக்கப் படவுள்ளது.

இவர்களை ஏற்கனவே இத்தகைமையை பெற்றிருந்த கே.யதுகுலசிங், ரி.தெய்வேந்திரன் ஆகியோருடன் முன்னாள் மாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் எஸ்.மரியதாசும் நெறிப்படுத்தி இருந்தனர். (சு-5)



யாழ்.மாநகர சபைக்குட்பட்ட 25 கிலோ மீற்றர் நீளமான வாய்க்காலை துப்புரவு செய்வதற்கு யுனொப்ஸ் நிறுவனம் நிதியுதவி வழங்கியுள்ளது. இந்நிதியுதவியில் வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை யாழ்.பொது நூலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா துப்புரவாக்கும் தொழிலாளிகளுக்கு திட்டம் தொடர்பில் விளக்கமளிப்பதையும் அதற்கான உபகரணங்களை வழங்கி துப்புரவு பணிகளை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம். இந்நிகழ்வில் யுனொப்ஸ் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# போதனாசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்கு உட்பட்ட முறைசாராக் கல்விப் பிரிவுக்கு உட்பட்ட தொழில் திறன் போதனா ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 8.30 மணியளவில் யாழ்.வலய முறைசாராப் பிரிவில் இடம் பெற உள்ளது.

எனவே சகல போதனா ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (சு-7)

# திருத்தி வாசிக்கவும்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுனர் சபை உறுப்புரிமை விண்ணப்பம் கோரல்-2010 தொடர்பாக வலம்புரியில் வெளியான விளம்பரத்தில் 1.அ, 2.உ மற்றும் 3 ஆகிய பந்திகளில் வந் துள்ள 2010 என் பதற்குப் பதிலாக 2009 எனத் திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகின்றோம்.

செயலாளர்,
நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

(C-3844)




## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் 2009 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 149 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த எமது செல்வப் புதல்வி

செல்வி
**தினுஜா சத்தியதாசன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்வதோடு அவர் மேன் மேலும் பல்கலையும் கற்று வாழ்வில் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

மேலும் இவரது வெற்றிக்கு வழிவகுத்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் சுப்ரா தனியார் கல்வி நிறுவனத்தினர் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மம்மா, தாத்தா, பெரியம்மா,
அக்காமார், அண்ணா, அண்ணி,
தம்பி, மாமாமார்கள்.

(4130)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2009ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் 3A விசேட சித்தியுடன் மாவட்டத்தில் 135 ஆவது இடத்தினைப் பெற்ற யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவி

**சிவசாமி மதுரா**

அவர்களை மேலும் பல கலைகள் கற்று மேன்மையுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மனோஜன் ஸ்ரோர் உரிமையாளர்
சித்தப்பா, சித்தி குடும்பத்தினர்.

கற்கோவளம்,
பருத்தித்துறை.

(C-3843)


# திறந்த பல்கலையில் இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2009/2010 ஆம் கல்வியாண்டுக்கான முயற்சியாண்மையும் சிறுவணிக முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறி (ESBM) இறுதிப் பரீட்சை நாளை 5ஆம் திகதி தொடக்கம் யாழ்.பிராந்திய நிலையத்தில் நடை பெறும் என இணைப்பாளர் அறிவித் துள்ளார். (சு)

# பொது வேட்பாளர் தீர்வுத் திட்டங்களில் ஜே.வி.பி.யின் நிலைப்பாடு என்ன?

## பாதுகாப்பு பேச்சாளர் கேள்வி

(கொழும்பு)

பொது வேட்பாளரின் தீர்வுத்திட்டங்கள் குறித்த ஜே.வி.பி. கட்சியின் நிலைப்பாடு அம்பலப்படுத்தப்பட வேண்டும் என அரசாங்க பாதுகாப்புப்பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

4 தடவைகள் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் மீண்டெழு ஸ்ரீலங்கா திட்டம் மற்றும் பொது வேட்பாளரின் 13 ஆவது திருத்தத் தீர்வுத் திட்டம் குறித்து ஜே.வி.பியின் நிலைப்பாடு மக்களுக்கு அம்பலப்படுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

13ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு அப்பாலான தீர்வுத்திட்டம் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கைக்கு ஜே.வி.பி எவ்வாறான பதிலை தெரிவிக்கவுள்ளதென அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை தமக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து மக்களின் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள ஜெனரல் சரத்பொன்சேகா முயற்சி மேற்கொண்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளர். (ஓ-6)

# முகாம்களில் உள்ள மக்களை காண எங்களுக்கு ஏன் இன்னமும் மறுப்பு?

## ஜயலத் ஜயவர்தன

(கொழும்பு)

இடம்பெயர் மக்களை பார்வையிடுவதற்கு இன்னமும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்கப்பட வில்லை என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

தமக்கு அனுமதி மறுக்கப்பட்டதன் மூலம் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உயர் நீதிமன்றில் அடிப்படை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவை பரிசீலனை செய்த உயர் நீதிமன்றம் அனுமதி மறுக்கப்பட்டதன் கார ணத்தை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு பணிப்புரை விடுத் துள்ளது.

வவுனியா உள்ளிட்ட முகாம்களில் தங்கியுள்ள இடம்பெயர் மக்கள் சுதந்திரமாக இடம் நகர அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களை பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டு வருவதாக மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜே.சீ.வெலியமுன தெரிவித்துள்ளார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக பாதுகாப்பு அமைச்சும் பாதுகாப்புச் செயலாளரும் குறிபிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# இணக்கப்பாடு நெகிழ்வுத் தன்மையால் பயங்கரவாதத்தை வெல்ல முடியாது

## பிலிப்பைன்சுக்கு இலங்கை விளக்கம்

(கொழும்பு)

பயங்கரவாதம் தொடர்பில் ஓர் நில்ல யான கொள்கையை பின்பற்ற வேண்டுமென பிலிப்பைன்ஸிற்கு இலங்கை அரசாங்கம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இணக்கப்பாடு நெகிழ்வுத்தன்மை போன் வற்றின் மூலம் பயங்கரவாத பிரிவினை வாதத்திற்கு நிரந்தரத் தீர்வு காண்பது சுலப மாகாதென மனித உரிமைகள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடொன் றில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஆயுத போராட்டங்கள் தொடர்பிலான கொள்கையில் உறுதிப்பாடு இருக்க வேண்டும் என தெரிவித்தார்.

அவர் இராணுவ நடவடிக்கை முன் னெடுக்கப்படவேண்டும் எனத் தீர்மானித்த தால் அதனை முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும் எனவும் இரண்டு நிலைப் பாடுகளை பின்பற்றினால் நிச்சயம் பிரச்சி னைக்கு தீர்வுகாண முடியாது எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் பயனுள்ளதாக அமையும் என்றால் மட்டுமே ஆயுத போராளிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)


சேவை நலன் பாராட்டு

சேவையில் உயர்ந்த சிகரம்
எங்கள் சர்வா என்றும் வாழி!



வடமராட்சியில் கணித பாடத்தை
முப்பத்தெட்டு ஆண்டுகள் கற்பித்து
23.11.2009 அன்று பாடசாலைக் கற்பித்தற்
பணியிலிருந்து ஓய்வு பெற்ற யா/ ஹாட்லி
ஆசான் ஆசிரியப் பண்புகளிற்கு
அணிகலனாக விளங்கும்
சர்வானந்தா அன்பிற்குரிய
நடராசா சர்வானந்தா
அவர்கள் ஆற்றிய சேவையைப்
பாராட்டி வாழ்த்துவதில் மகிழ் வெய்துகின்றோம்.

எல்லா நலன்களையும் இனிதே பெற இறைவனை வேண்டும்

உபய கதிர்காமம்,
புலோலி தெற்கு,
புலோலி.

புற்றாளை/ உபய கதிர்காமம்
பழைய மாணவர்களும்,
சமூகமும்.

(C-3838)



யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

**Post Graduate Diploma in Management (Pre.MBA)**
(MBA final (Topup) in UK / London) 【காலம் 9 மாதங்கள்】
To Whom :பட்டதாரிகள், (BA,Bsc) வியாபார பட்டதாரிகள் அந்தஸ்து அற்றவர்கள் உயர்தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் (HNDM, HNDA)

**Foundation Diploma In Hospitality Management** (Topup degree in UK / London)
【காலம் 6 மாதங்கள்】 Hotel Management
இவ் 6 மாதக் கற்கை நெறியினை முடித்தவர்கள் அவர்களின் 2 வருடப் (Degree) பட்டப்படிப்பை லண்டனில் (London - UK) கற்கமுடியும்.
கல்வித்தகைமை: G.C.E (O/L) பயின்றிருந்தால் போதுமானது, மேலதிகவிபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

**Diploma in English** 100 % வெற்றி
100 % பயிற்சி **Advanced Diploma in English** 【காலம் 6 மாதங்கள்】
மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது
ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த / தனிப்பட்ட குழு உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட (Special) முறையில் வகுப்புகள் ஒழுங்கு படுத்தித் தரப்படும். அத்துடன் நல்ல கட்டணக் கழிவும் தரப்படும்.

**Access Programming**
(Foundation Degree Programme)
【காலம் 6 மாதங்கள்】
O/L முடித்த மாணவர்கள் அல்லது A/L லில் நல்லபெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து Higher National Diploma & Degree போன்ற கற்கை நெறிகளைக் கற்று, Bsc, BBA,MBA பட்டதாரி ஆக முடியும்.

அதிக வருவாய் நல்ல வேலைவாய்ப்பு
**Foundation Diploma In Nursing** (Health & Social Care)
Topup degree in UK / London
【காலம் 6 மாதங்கள்】
கல்வித் தகைமை (G.C.E (O/L) பயின்றிருத்தல் போதுமானது மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

மாணவர்களுக்கு 100 % Student Visa பெற்றுக்கொள்வதற்கு அனுபவம் வாய்ந்தஎமது சட்டத்தரணிகளால் உத்தரவாதம் அளிக்கப்படும். விபரங்களை அறியவும், அறிவுரைகளுக்கும் காலதாமதம் செய்யாது இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்

**Foundation Diploma in Management** 【காலம் 6 மாதங்கள்】
(For BBA Degree Programme) Minimum Requirement : G.C.E. (O/L)
இப்பாட நெறியின் 2 வருடப் பட்டப்படிப்பை நீங்கள் லண்டனில் பூர்த்திசெய்து BBA பட்டதாரி ஆகலாம்.
தனிப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் Management துறையிலே தங்களின் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் இப்பாட நெறியில் இணையலாம்.

Second Floor,
No.15, Sirampiyadi Lane
(Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்)
(கொசி Hotel மேலே)
Tel :021 2224550 E-mail: info@bchs.lk
HotLines: 0773501499
0777222422/ 0714299935



பாராட்டி வாழ்த்துகின்றோம்

இரத்தினேஸ்வரன் நிரோகரன்
(மாணவன், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)




க.பொ.த.உ/த கலைப்பிரிவில் 3A (மாவட்ட நிலை 13) பெற்றமைக்கு எமது பகுதி மக்கள் சார்பில் பாராட்டு தெரிவிப்பதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்போடு வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

மேலும் இம் மாணவன் கல்வி பயின்ற கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது பகுதி சன சமூக நிலையம் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகத்தினரும், பொது மக்களும்
ஜனசக்தி ச.ச.நிலையம்,
சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

(4129)



தென்மராட்சி வலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், வலய மட்டத்தில் முதலிடமும் மாவட்ட மட்டத்தில் இரண்டாமிடமும் பெற்ற சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி ப.கஸ்தூரி மங்கல விளக்கேற்றுவதையும், நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை, மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-சாவகச்சேரி நிருபர்)

## ஆறுமுகநாவலரின் குருபூசைத் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 130 ஆவது குருபூசைத்தினம் எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவ பரிபாலன சபைத் தலைவர் சிவநெறிப் புரவலர் த.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் ஆ.சபாரத்தினம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். நிகழ்வுகளில் குருபூசைத் தினத்தை ஒட்டி நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். தொடர்ந்து பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் " நாவலரும் புராணபடனமும்" எனும் விடயம் பற்றி சிறப்புரையாற்றவுள்ளார். (ஓ-9)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)


தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இசை கலைமாணி ந.சஞ்சீவன் பக்கவாத்திய சகிதம் இன்னிசை வழங்கவுள்ளார். (ஓ-35)

## சித்திர பாடத்தில் அதியுயர் சித்திகள்

(யாழ்ப்பாணம்)

ஆத்திசூடி வீதி , கந்தர்மடத்தில் இயங்கி வரும் ஐ.ஏ.ரி. சித்திரப்பயிற்சி நிறுவனம் சித்திரபாடத்தின் வளர்ச்சிக்காக பல செயற்றிட்டங்களை ஆற்றி வருகின்றது. இந்நிறுவனத்தில் பயின்று 2009 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய அதிக மாணவர்கள் அதிஉயர் சித்திகளைப் பெற்றுள்ளனர். இவர்களில் 8 மாணவர்கள் "A" தர சித்தியையும் 15 மாணவர்கள் "B" தர சித்தியையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-9)

## கணனி மென்பொருள் மாகாண மட்டப் போட்டியில் இரண்டாம் இடம்



கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலய ஆசிரியரும் புதிய உயர் கல்லூரி விரிவுரையாளருமான செ.கமலக்கண்ணன் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் இரண்டாம் தரக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம் -II (SEMP) இனால் நடாத்தப்பட்ட கணனி மென்பொருள் போட்டியில் வடமாகாணத்தில் 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். (ஓ)

## சேவை நயப்பும் மணிவிழாவும்

(காரைநகர்)

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி ஓய்வு பெற்ற அதிபர் ந. பரமசிவம் அவர்களின் சேவை நயப்பும் மணி விழாவும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் ஆசிரியர் கழகத் தலைவர் திருமதி க.லிங்கேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் வே. தர்மரட்ணமும் அவரது பாரியாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் அவரது பாரியாரும் யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் கற்கைநெறி பீடாதிபதி பேராசிரியர் க.சத்தியசீலனும் அவரது பாரியாரும் யாழ். பல்கலைக்கழக கணிதத்துறை தலைவர் கலாநிதி சி. ஸ்ரீசற்குணராசாவும் அவரது பாரியாரும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜீ.வி. இராதாகிருஷ்ணனும் அவரது பாரியாரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலனும் அவரது பாரியாரும் ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.பாஸ்கரன் மற்றும் அவரது பாரியார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-3)

## எச்.ஐ.வி. எயிட்ஸ் விழிப்புணர்வு தொடர்பான வரைதல் போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் எச்.ஐ.வி. எயிட்ஸ் விழிப்புணர்வு தொடர்பாக க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்காக ஒரு வரைதல் போட்டி ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளது.

இதில் பங்கு பற்றி வெற்றியீட்டும் முதல் மூன்று மாணவர்களுக்கு பரிசில்களும் மேலும் பத்து மாணவர்களுக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

உங்கள் பிரியமான சகபாடிக்கு எயிட்ஸ் வராது தடுப்பதற்கு அவரிடம் நேர்மையாக இருங்கள் எனும் ஆக்கப் பொருளில் எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணி வரை யாழ். சென்பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள அகவொளி குடும்பவளத்துணை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றும் மாணவர்களின் பெயர், பால், வயது, வகுப்பு என்பவற்றுடன் கல்லூரி மாணவர்கள் என்பதை அவ்வவ் கல்லூரி அதிபர்கள் உறுதிப்படுத்தி எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக கௌரவ தலைவர் இலங்கை செஞ்சிலுவை சங்கம், யாழ். கிளை 73 கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகிறது. (ஓ-9)

## நீர் நிரம்பிய கிடங்கினால் போக்குவரத்தில் சிரமம்

(யாழ்ப்பாணம்)

பலாலி வீதி, தபால் பெட்டி சந்தியில் நீர்க் குழாய் பொருத்துவதற்காக வெட்டப்பட்ட கிடங்கு உடன் நிரப்பப்பட்டும் பின்னர் உள் வாங்கப்பட்டதால் ஏற்பட்ட கிடங்கில் நீர் நிரம்பிக் காணப்படுவதால் அப் பகுதியில் பிரயாணம் செய்யும் மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

தற்போது மழைக்காலம் என்பதால் இங்கு சேறும், சகதியுமாகக் காணப்படுவதால் வாகன நெரிசல் கூடிய இவ் வீதியில் மோட்டார் வண்டி, துவிச்சக்கர வண்டியில் செல்வோர் வீதியோரங்களில் நிற்க வேண்டிய சந்தர்ப்பங்களில் பெரிதும் சிரமப்படுவதாகவும், பல முறைப்பாடுகள் செய்தும் இன்னமும் இது சீர்செய்யப்படாதது கவலையளிப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஓ)

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு காலங்கடந்த பிறப்பு பதிவுகள் சம்பந்தமான நடமாடும் சேவை நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதுவரை பிறப்பு பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் பதிவுகளை மேற்கொள்வதற்கு உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு யாழ்ப்பாணப் பிரதேச செயலர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண தரப் பாரீட்சைக்கு யாழ்.வலயத்திலிருந்து யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டங்களிலும் தென்மராட்சி, தீவக வலயங்களிலிலும் இருந்து க.பொ.த (சா/த) பரீட்சைக்கு கடமையாற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்ட அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் தெரிவுசெய்யப்பட்ட அனைத்து அலுவலர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ)

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் விருது விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ் மாவட்ட அலுவலகம் நடத்தும் இளைஞர் விருது விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் அ.சக்திவேல் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் நாயகம் பாஸ்வர சேனாங்க குணரத்ன, கௌரவ விருந்தினராக யாழ். அரச அதிபர் கே. கணேஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாண பணிப்பாளர் தி.சிவதட்சணாமூர்த்தி ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

தொடர்ந்து விருது வழங்கல் வைபவமும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஓ-9)




## விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் இன்று வெள்ளிக்கிழமை நல்லூர் பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை நல்லூர் முருகன் சனசமூக நிலையத்திலும், நண்பகல் 11.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை பாணாங்குளம் அம்மன் கோவில் அருகேயும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

தொடர்ந்து கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை கடற்கரை வீதியிலும், நண்பகல் 11.30 மணியிலிருந்து 1.30 மணிவரை ஈச்சமோட்டை சனசமூக நிலையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

மேலும் அரியாலை பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை கச்சேரி நல்லூர் வீதி, நாவலர் வீதி சந்தியிலும் நண்பகல் 11.30 மணியிலிருந்து 1.30 மணிவரை அரியாலை, பெரிய பாலத்தடி ஆசிர்வாதப்பர் வீதியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றுக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுள்ளார். (ஓ-9)

# விஜயநகரப் பேரரசுக் கால சமய நூல்கள் (கி.பி.1100-1700)

69

"ஒருநாள் இவளுடன் நாங்கள் சோலையில் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தபோது, மதம் பிடித்த யானை ஒன்று ஓடி வந்தது. நாங்கள் ஓடினோம்; அது எங்களைத் துரத்தி வந்தது. அஞ்சி அலறினோம். அப்போது எங்கிருந்தோ வீரன் ஒருவன் அங்கே தோன்றி இவைளத் தன் இடப்பக்கத்தில் பற்றிக் கொண்டு, அந்த யானை மேல் தன் வேலை எறிந்து தடுத்தான்.

வேல்பட்ட இடத்திலிருந்து வந்த இரத்தம் அந்த வீரனின் மார்பில் ஒழுகி ஒரு பகுதியைச் செந்நிறம் ஆக்கியது. அவனுடைய இடது தோளின்மேல் சாய்ந்து கிடந்த உங்கள் மகளின் கண்களிலிருந்து வந்த கண்ணீர் கண்களில் தீட்டிய மையுடன் கலந்த கருநிறமாய் ஒழுகி வீரனுடைய மார்பின் இடப்பகுதியைக் கருநிறமாக்கியது.

அப்போது அந்த வீரன் எப்படித் தோன்றினான். தெரியுமா? உமாதேவியை இடப் பாகத்தில் கொண்ட சிவபெருமான் போலவே தோன்றினான்" என்று சொல்லிப் பெற்றோர்க்கு உண்மை விளங்க வைத்தாள்.

*மண் அலை யாமல் வளர்க்கின்ற*
*வாணன்தென் மாறைவெற்பில*
*அண்ணலை ஆயிழை பாகன்என்று*
*அஞ்சினம்அஞ்சனம்தோய்*
*கண்அலை நீர்இடப் பாகமும்*
*மேலவந்த கைக்களிற்றின்*
*புண் அலை நீர்வலப் பாகமும்*
*தோயப் பொருத அன்றே*

இவ்வாறு கோவையின் ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு புகழ்ச்சியையோ உணர்ச்சியையோ எடுத்துக்கூறி, நானூறு பாட்டுக்களால் ஆகிய தொடர்ந்த கதைபோல் அமைந்திருக்கும். அவற்றுள் பல பாட்டுக்கள் கற்பனைச் சுவையுடன் விளங்கும்.

**உரையாசிரியர்கள்**

முன்னமே தமிழ்நாட்டில் இருந்த கோயில்கள், பெரிய பெரிய கட்டடங்களும் இக்காலத்தில் சிற்ப வேலைப்பாடுகள் நிரம்பிய மண்டபங்களும் பெற்று விளக்கம் உற்றன. முன்னமேஇருந்த சமய நூல்கள், விரிவான விளக்கங்களும் துணை நூல்களும் பெற்று விரிவு அடைந்தன. அவை போலவே, முன்னமே இருந்த உயர்ந்த இலக்கியங்கள், உரையாசிரியர்களால் நுட்பமான உரைகளும் நயமான விளக்கங்களும் பெற்றுச் சிறப்பு அடைந்தன.

உரைகளும் விளக்கங்களும் எழுதியவர்கள் இலக்கிய வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் நல்ல தொண்டு புரிந்தார்கள். அவர்கள் எல்லோரும் கற்றுத் தெளிந்த அறிஞர்கள். அவர்களின் எழுத்துக்களிலேயே பழைய தமிழ் உரைநடை இன்று காணமுடிகிறது. எட்டாம் நூற்றாண்டில் களவியல் என்னும் நூலுக்கு நக்கீரர் என்னும் உரையாசிரியர் எழுதிய உரையே அவ் வகையில் பழமையானது.

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

அது செறிவும் செழுமையும் உடையது. ஆயினும் செய்யுளில் சீர்கள் அமைப்பது போலவே சொற்கள் அளவுபட்டு அமைந்து எதுகையும் மோனையும் நிரம்பிய அந்த நடை உடைய நடையாக இல்லாமல் செய்யுள் நடை போன்றே உள்ளது. அந்த உரைக்கு அடுத்த பழமை உடையது தொல்காப்பியம் முழுமைக்கும் இளம்பூரணர்எழுதியஉரையாகும். பிறகு வந்த உரையாசிரியர்கள் அவருடைய பெயரை சுட்டாமல் உரையாசிரியர் என்ற பெயராலேயே குறிப்பிடுவர். இது அவருடைய சிறப்புக்குச் சான் றாக உள்ளது. நக்கீரரின் உரை நடை போல் அலங்கார நடையாக இல்லாமல், இளம்பூரணரின் உரைநடை எளிமையும் தெளிவும் பெற்றுள்ளது. அவருடைய காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனலாம். அடுத்துப் பதின்மூன்றாம் நூற்றாண்டில் தொல்காப்பியத்தில் ஒரு பகுதிக்கும் திருக்கோவையார்க்கும் உரை எழுதியவர் பேராசிரியர் என்று வழங்கப்படுபவர்.

அவருடைய நடை செறிவும் செம்மையும் வாய்ந்தது. சேனாவரையர் தொல்காப்பியத்தின் இரண்டாம் பகுதிக்கு உரை எழுதினார். திட்பநுட்பம் செறிந்த நடை அவருடையது. வடமொழிப் புலமையும் நிரம்பியவர் அவர். நச்சினாக்கினியர் என்னும் உரையாசிரியரும் வடமொழி கற்றவர்.அவர் தமிழ் இலக்கணத்திற்கும் இலக்கியத்திற்கும் செய்த தொண்டு பெரிது. தமிழில் பல நூல்களுக்கு உரை எழுதிய பெருமை அவரையே சேரும். பாடல்களுக்கு நேரே உரை கொள்ளாமல் அந்வயப்படுத்திப் பொருந்தாத வகையில் சொற்களை எங்கெங்கோ கொண்டு சேர்த்துப் பொருள்கொள்ளும் செயற்கை முறை அவரிடம் உள்ள குறை ஆகும்.

ஆயினும் அவருடைய அறிவும் திறனும் போற்றத்தக்கவாறு அவர் எழுதிய உரைகளில் விளங்குகின்றன. அவருடைய உரை நடை பெருமிதமும் அழகும் கூடியது. இந்த உரையாசிரியர்களின் உரைகளில் அங்கங்கே காட்டும் மேற்கோள்களை பல பழைய நூல்களிலிருந்து அமைந்தவை.

அவற்றால் மறைந்துபோன பல நூல்களைப் பற்றி ஒரு சிறிதாவது அறிய முடிகிறது.சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையால் பழங்காலத்து இசை நூல்கள், நாடக நூல்கள் பலவற்றின் பெயர்களை அறிகிறோம். அந்த உரையால் பழந் தமிழ்நாட்டுக் கலைகளைப் பற்றி எவ்வளவோ அறியமுடிகிறது.

**பேராசிரியர் மு.வரதராசன்**

முழுதும் தெளிவாக அறியமுடியாவிட்டாலும், கலை, வரலாறு பற்றிய இருள் ஓரளவு விலகுகிறது என்று கூறலாம். அவர்க்கு முன்பே சிலப்பதிகாரத்துக்கு அமைந்த பழைய உரையும் ஒன்று உண்டு. இரண்டு உரைகளின் நடையும் செம்மையானவை ; எதுகை மோனைகளும் சீர்களின் அடுக்குகளும் குறைந்தவை ; கருத்துக்களைத் தெளிவாக விளக்குபவை. (தொடரும்)

# இந்த நாட்டின் உழைக்கும் மக்கள் புத்திசாதுரியமானவர்கள், பாராட்டுக்குரியவர்கள்

## ஜனாதிபதி புகழாரம்



(கொழும்பு)

கடந்த காலங்களில் உழைக்கும் வர்க்கம் அரசாங்கத்திற்கு அளித்த ஆதரவு பாராட்டுக்குரியதென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட யுத்தம் பெற்றி பெறுவதற்கு உழைக்கும் மக்களின் பங்களிப்பு அளப்பரியதென்றும் இந்த நாட்டின் உழைக்கும் மக்கள் புத்திசாதுரியமானவர்கள் எனவும் அவர் புகழாரம் சூட்டியுள்ளார்.

நாட்டு மக்கள் என்ற ரீதியில் உழைக்கும் மக்களுக்கு காணப்படும் பொறுப்புக்களை உணர்ந்து அவர்கள் செயற்பட்டு வருவதாகவும் பல்வேறு சக்திகள் தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுக்குமாறு தூண்டிய போதிலும் உழைக்கும் மக்கள் இந்த சதி வலையில் சிக்கவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

30 ஆண்டுகால யுத்தத்தை வென்றெடுப்பதற்கான பேராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கத் தேவையான பொருளாதார இயலுமையை உழைக்கும் வர்க்கத்தினர் அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளனர் என்றும் உழைக்கும் மக்களின் உரிமைகளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் காட்டிக்கொடுக்காது எனவும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஓ-5)

# மீளக்குடியயேறுவோரின் சாதாரண வாழ்க்கைக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன்

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடைய அசையும் அசையா சொத்துக்களின் பெறுமதியினை அரசாங்கம் அவர்களுக்கு மீளச் செலுத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இக் கோரிக்கைய விடுத்துள்ளார்.


இதுகுறித்து அவர் வெளியிட் டுள்ள அறிக் கையில் வடக்கில் யுத்தம் கார ணமாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் தமது உடைமைகள், கால்நடைகள் உள்ளிட்ட அனைத்தையும் இழந்துள்ளனர்.

அவர்களை மீளக் குடியமர்த்தும்போது சாதாரண வாழ்க்கை நடைமுறையை பின்பற்றக்கூடிய சூழலை அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். இந்தப் பொறுப்பினை அரசாங்கம் தட்டிக்கழிக்கக்கூடாது எனக் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை "சொல்லின் சிகரம்" பொன்.சுகந்தன் மகாபாரதம் தொடரில் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (6-35)






சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வை தென்னிந்திய திருச்சபையின் சாவகச்சேரி பணிமனை குரு வண. ஜோன் தேவசகாயன் அடிகளார் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அருகில் உப அதிபரும் கிறிஸ்தவ மன்றப் பொறுப்பாளருமான திருமதி ஆர்.ஜே.ராஜு நிற்பதையும்,மாணவர்களின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சாவகச்சேரி நிருபர்)

# விண்டோஸ் 7 புதுமைகள்




**மேத் இன்புட் பனல்**
**(Math Input Panel)**

விண்டோஸ் 7 தொகுப்பை உங்கள் டேப்ளட் பிசி அல்லது டச் ஸ்கிரீன் கொண்ட மொனிட்டருடன் இயக்குகிறீர்களா? அப்படியானால் சில மத்ஸ் கல்குலேஷனை மேற்கொள்கையில் அதற்கான சிறப்பு கீகளைத் தேடிப் பயன்படுத்த வேண்டியதில்லை.திரையில் மத்ஸ் சிம்பல் மற்றும் போர் முலாக்களை அமைத்தால் இந்த மத் இன்புட் டூல் தானாக அதனை அறிந்து கொண்டு டெக்ஸ்ட்டாக மாற்றி கணக் கினை செயல்படுத்துகிறது.

சாதாரண வழக்கமான திரை கொண்டு இயங்கிக் கொண்டிருந்தால் திரையில் மவுஸ் மூலம் இந்த போர் முலாக்களை எழுதியும் இந்த டூல் மூலம் முயற்சிக்கலாம்.

**பீரைவேட் கரக்டர் எடிட்டர்**
**(private Character Editor)**

ஒரு சிலரின் கையெழுத்து அழகாக இருக்கும்.அச்சிடுவதற்குப் பதிலாக இதனையே வைத்துக்கொள்ளலாமே என்று விரும்புவார்கள். கணனியில் ஒரு சில எழுத்துக்களில் நீங்கள் சிறிய மாற்றங் களை விரும்புவீர்கள் அல்லது எழுத்து வகைகளை நீங்களே மாற்றி அமைக்க ஆசைப்படலாம். அப்படிப்பட்ட விருப்பம் உள்ளவர்களுக்கு இந்த கரக்டர் எடிட்டர் டூல் உதவுகிறது. கரக்டர்களை எடிட் செய்து, பின் கரக்டர் மேப் மூலம் இவற்றை இன்புட் செய்து டொகுமென்ட்களிலும் பிற பைல்களிலும் பயன்படுத்தலாம்.

**சிலவேறுபாடுகள்**

நீங்கள் உங்கள் கணனி ஒப்பரேட்டிங் சிஸ்டத்தை அப்கிரேட் செய்திருந்தாலும், புதிய கணனி ஒன்றை விண்டோஸ் 7 சிஸ்டத்துடன் வாங்கியிருந்தாலும் , பெரும்பாலானவர்கள் விண்டோஸ் எக்ஸ்பியில் இருந்துதான் விண் டோஸ் 7 சிஸ்டத்துக்கு மாறுபவர்களாக இருப் பார்கள். இவர்கள் சந்திக்க நேரும் சில அடிப் படை வேறுபாடுகளை இங்கு காண லாம்.

1. விண்டோஸ் எக்ஸ்பி பயன்படுத்துபவர் கள் தாங்கள் அடிக்கடி பயன்படுத்தும் புரோ கிராம்களை குயிக்லாஞ்ச் பாரில் கொண்டு வந்துவைத்துவிடுவார் கள். அதிலி ருந்து கிளிக் செய்து புரோகிராமினை இயக்கிச் செயல்படுவார்கள். இதற்காகவே சிலர் கீழாக உள்ள டாஸ்க் பாரில் அதிக ஐகன்கள் வைப்பதற்காக அதனை டபிள் டெக்கர் பஸ்போல பெரிதாக வைத்திருப்பார்கள். விண்டோஸ் 7 சிஸ்டத்தில் குயிக் லாஞ்ச் பார் இல்லை. அதற்குப் பதிலாக பின்னிங் (Pinning) என்னும் வசதி தரப்பட்டுள்ளது.


எந்த அப்ளிகேஷனிலும் ரைட் கிளிக் செய்து கிடைக்கும் மெனுவில் Pin என்னும் பிரிவை டாஸ்க்பார் அல்லது ஸ்டார்ட் மெனு அல்லது இரண்டிலும் இருக்கும்படி செட் செய்திடலாம்.

மேலும் டாஸ்க் பாரில் உள்ள ஒரு குறிப் பிட்ட அப்ளிகேஷன் இயங்கிக் கொண்டிருந் தால் அதன் ஐகனை சுற்றிச் சிறிய வட்டம் காட்டப்படுவது ஒரு புதுமையான வேறுபாடு.

(புதுமைகள் வளரும்)




# ஒரே நேரத்தில் நான்கு கூகுலில் தேட முடியுமா?




ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட கூகுலில் தேட வேண்டும் என்று எப்போவதாவது முயற்சித்திருக்கிறீர்களா? அப்படி நீங்கள் முயற்சித்திருக்காவிட்டாலும் கூட அதற்கான வசதி இப்போது கிடைத்திருக்கிறது . நான்கு கூகுல் இணையத்தளத்திற்கு சென்றால் இப்படி ஒரே நேரத்தில் நான்கு கூகுலில் தேடலாம். அதாவது திரையில் நான்கு கட்டங்களாக நான்கு கூகுல் முகப்பு பக்கங்கள் தோன்றும் ஒவ்வொன்றிலுமாக தகவல்களை தேடலாம்.

எதற்கு இந்த வசதி ? இதனால் என்ன பயன்? என்பதெல்லாம் தெரியவில்லை. கூகுலை அடிப்படையாகக் கொண்டு விதவிதமான சேவைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒரு சில விளையாட்டுத்தனமானவை. அந்த வரிசையில் இதுவும் சேர்ந்திருக்கிறது.இந்த சேவையை உருவாக்கியுள்ள அலெக்ஸ் மற்றும் எர்ட்டி ஆகியோர் இதன் பின்னே இருக்கும் சுவாரஸ்யமான கதையை தளத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

இருவரும் ஒரு நாள் கூகுல் ரோல்க் சேவை மூலம் உரையாடிக்கொண்டிருந்த போது திடீரென கூகுல் கூகுல் காம் இணையதள முகவரி பதிவு செய்யப்பட்டிருக்குமா என்று கேள்வி எழுந்துள்ளது.

ஆனால் யாரோ ஒருவர் ஏற்கனவே அந்த முகவரியை பதிவு செய்திருந்தனர். உடனே கூகுல் கூகுல் தானே பதிவுசெய்யப்பட்டுள்ளது. கூகுல் கூகுல் கூகுல் கூகுல் முகவரியை பதிவு செய்தால் என்ன என்று கேட்டுள்ளனர்.

அதன் பயனாக கூகுல் கூகுல் கூகுல் கூகுல் முகவரியை உடனே பதிவு செய்து விட்டனர். அதன் பின்னர் அதில் நான்கு கட்டங்களை அமைத்து நான்கு கூகுலில் தேடும் வசதியை ஏற்படுத்தினர்.எப்படி இருக்கிறது ஐடியா?link; http://googlegooglegooglegoogle.com/

# யாழில் சர்வதேச கணனி மற்றும் உயர்கல்வியை வழங்கும்

# UNI ICT Campus & Nottingham College of London



G.C.E.(O/L) & G.C.E (A/L) பரீட்சையின் பின் உயர் கல்வியை தொடர்வதற்கு யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு UNI ICT Campus & Nottingham College of London தற்போது வழங்கும் கற்கை நெறிகள் தொடர்பிலும் UNI ICT Campus நிறுவன இயக்குநர் எஸ்.செல்வ தாஸன் இவ்வாறு விபரிக்கின்றார்.

நிறுவனத்தினால் மாணவர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் தொடர்பிலும் பொறுப்புகளும் முன்னுரிமைகளும் ஒன் றின் மேலொன்று பொருந்தியவாறு உலகம் சுழன்ற வண்ணமுள்ளது. லண் டன் நொட்டிங்காம் கல்லூரியில் (NCL), உங்கள் தனிப்பட்ட தொழில் வாண்மைக் கான கல்விசார்ந்த குறிக்கோள்களை முனைப்படுத்தி நாங்கள், தொழில் தொடர் பான பட்டப்படிப்பு, டிப்ளோமா, உயர்தர டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கி வருகின்றோம்.

உண்மை உலகின் தொழில்சார் கல்வியை நோக்கிய புதிய சிந்தனையை உரு வாக்குவதிலும், புதிய சந்தர்ப்பங்களைத் தேடும் ஊக்கத்திற்கான வளர்ச்சியை ஏற்படுத்துவதில் உயர்ந்த கற்றலை வழங் குவதற்காக எமது நிறுவனம் தன்னை முற்றாக அர்ப்பணித்துள்ளது.

இந்த வகையில் எமது நிறுவனமானது பின்வரும் சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சர்வதேச நிறுவனமாகும்.

University of Portsmouth, East London College, Middlesex College, West End College London, the City College, Heriot Watt University, University of Bradford, University of Kingston, Middlesex University, Fontys University of Applied Science, Wittenborg University, Tilburg University,Saxion Universities of Applied Science, Europort Business School, Wageningen University,

Unitec Campus, Natcoll Design Technology, Universal College of Learning, AIS ST HELENS, International Management Institute, Business & Hotel Management School, Americanos College, Paramount College of Technology, College of Tourism and Hotel Management, Harford Institute,

Raffles Design Institute, PATH School of Technology and management, Humber College, UniversityCollege of Fraser Valley, Kwantlen University, St . Mary's University,The Royal Roads University, Polish open University, and European Institute of Education (eie) ஆகி யவற்றை குறிப்பிடலாம்.

எங்கள் வரலாறு உயர் கல்வி அமைச்சுமற்றும்தொழிற் பயிற்சி நிறுவனத்துடன் முற் றாக அங்கீகரிக்கப்பட்டு 2003 ஆம் ஆண் டில் நிறுவப் பட்டது. பலவித நிறுவனங்களில் எமது நிறுவனத்தின் பழைய மாணவர்கள் பொறுப்பான பதவிகள் வகிப்பது குறித்து NCL பெருமிதம் அடைகிறது.

எங்கள் NCL முகாமைத்துவம், எமது மாணவர்களுக்கு உயர்தரத்திற்கான கல்விப் புல வேலைத் திட்டத்தை வழங்குவதற்காக தன்னை ஈடுபடுத்தி, அதன்பொருட்டு ஆரம்ப நடவடிக்கையாக பல வெளிநாட்டுக் கல்லூரி கள், நிறுவனங்களுடன் ஆலோசனைகளை நடாத்தி வருகின்றது. குறைந்த அளவில் வெளிநாட்டுப் பட்டங்களின் தரத்திற்கேற்ற சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தரா தரத்தை வழங்குவதே எங்கள் முயற்சியாகும்.

எதிர்கால மாணவர்கள் இன்றைய பல தேவைப்புலங்களின் தங்கள் தொழிலின் உயர்தரம் பேணும் நடைமுறைசார் அறிவைப் பெறுவதை நோக்காகக் கொண்டு மாணவர் கட்கு தகவல் தொழில்நுட்பத்துறையில் பல வித பயிற்சியளிக்கும் ஓர் நிறுவனமே NCL என்றழைக்கப்படும் லண்டன் நொட் டிங்காம் கல்லூரி ஆகும். வளர்ந்து வரும் ஆற்றல்மிகு கல்விச் சமூகமா NCL பலவகை ஆற்றலால் நடத்தப்பட்ட மாணவர்கட்கு மிகச் சிறந்த கல்வியை வழங்குகின்றது.

கொள்கையும் நோக்கமும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உதவுவதே சிறந்த ஈடுபாடு என NCL கருதுகின்றது. இதன் பொருட்டு இந் நிறுவனம் தொழில்வாண்மை தனியாள் விருத்தியை ஒவ்வொருவரிடமும் வலியுறுத்துகின்றது. கொள்கைகள், வேலைத் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் யாவும் மாண வர்களினதும் இந்நிறுவனத்தினதும் தேவைக் கேற்ப சீராக மதிப்பீடு செய்யப்பட்டு முக்கிய மாற்றங்களுக்கேற்ப வடிவமைக்கப்படும்.




எமது கொழும்பு தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற வருடாந்த மாணவர் வழிகாட்டல் கருத்தரங்கில் பங்கு பற்றி ஆலோசனைகள் வழங்கிய Karen Whyte (British High Commissioner Former Visa Officer)

நிறுவன்த்தின் கொள்கைக்கும் நோக் கத்திற்குமான ஆதரவுக்கமைய அதன் இலக்குகளை பின்வருமாறு வகுக்கலாம். உள்நாட்டு மாணவர் குழு, தனிமனித தொழில்வாண்மை ரீதியான இலக்குகளை அடைவதற்கு வழிவகுத்தல். மாணவர்கள் தமது வேலைக்கு அமைவாகத் தமது அறிவுப் பயிற்சி மற்றும் திறன்களை இசை வாக்கிக்கொள்ள வழிகாட்டுதல், வாழ்நாள் பூராகவும் கற்கும் திறனையும் உருவாக் குதல், தொழில்வாண்மைத்தரம் ,பொறுப்பு, ஒழுக்கநெறி ஆகிய முக்கிய பண்புகளை வளர்த்தெடுத்தல். மாணவர்களின் குழு அடிப்படையிலான கற்றலை வழிநடத்து வதற்கேற்ப கல்விசார் வேலைத் திட்டங்கள், சேவை வசதிகள், தொழில்நுட்பங்கள் ஆகிய வற்றை வழங்குதலும்,அவர்களின் புலமை சார் அபிவிருத்தி மற்றும் தனியாள் வளர்ச்சி ஆகியவற்றிற்குப் பங்களித்தலும், நடை முறை தொழில்சார் நிபுணத்துவத்திற்கமை வாக அனுபவமும், தராதரமும் வாய்ந்த கல்வியறிவாளர்களைக் கொண்டு பல்லினத் தன்மையை நிலைநிறுத்தல். தொழில் வாண்மை வலையமைப்பு மற்றும் வர்த்தகத் தொடர்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி மாணவர்களை தொழில் பெறும் வகையி லும், தொழிலில் வெற்றியடையக் கூடிய வகையிலும் அவர்களைப் பயிற்றுவித்துத் தயார் செய்தல் ஆகும்.


மேலும் ஆங்கில மொழியில் Reading, Writing. Speaking, Listening ஆகிய அடிப் படை அம்சங்களினூடான விரிவான பயிற்சி வழங்கப்படுவதனால் ஆங்கிலத்தில் மிகவும் பலவீனமாக (Weak) காணப்படு கின்ற மாணவர்களும் கற்கை நெறி முடிவில் சிறந்த ஆங்கில தேர்ச்சி கொண் டோராக மாற்றிக்கொள்ள வாய்ப்புக்கிடைக் கின்றது.

இன்று வர்த்தகத் துறையில் அக்கறை காட்டப்படும் தொழில்வாண்மைப் புலத்திற் குரிய தொழில்சார் அறிவை NCL வழங்கும். எமது நிறுவனத்தில் மாணவர்கள் தமது தனியாள் தொழில் வாண்மைக் கனவுகளை நனவாக்கும் பொருட்டுச் சிறந்த கற்றல் சூழ லைத் தேடும் மாணவர்கட்கு உதவக் கூடிய முயற்சி எடுத்து வருகின்றோம். (தொடரும்)

# RAVEENS ENGLISH MEDIUM CLASSES KARAVEDDY (with laboratory Facilities)

## கல்வி

ஆரம்பக்கல்வி :- அல்வாய் வடக்கு றோ.க.பாடசாலை
இடை நிலைக்கல்வி:நெல்லியடி M.M.V.
உயர் கல்வி: மகாஜனாக்கல்லூரி தெல்லிப்பழை,சென்யோன்ஸ் அக்கடமி, யாழ்ப்பாணம்.
பட்டப்படிப்பு: பேராதனைப் பல்கலைக்கழகம்.
பட்டப்பின் படிப்பு : யாழ். பல்கலைக்கழகம்



திரு. ப.ஈஸ்வரநாதன்.
B.Sc (Agric) Dip.in Ed.SLTS I

## சேவை

1981–1985 நு/கைலன்ஸ் கல்லூரி, அட்டன் (தேசிய பாடசாலை)
1985–1987 நு/சென்யோசப் கல்லூரி, மஸ்கெலியா.
1987–1993 யா/ விக்னேஸ்வரக் கல்லூரி, கரவெட்டி.
1993–2001 யா/ ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.

## இருண்டகாலம் (darkage)

2001–2005 கட்டைவேலி மெ.மி.த.க. பாடசாலை, கரவெட்டி (ஆரம்ப பாடசாலை)
2005–2008 சிறிநாரதா வித்தியாலயம் கரவெட்டி ( கஷ்ட பிரதேச பாடசாலை)
2008–2009 யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி (ஆரம்ப பாடசாலை)

**3.12.2009 இல் அரச ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் வாழ்நாள் முழுவதும் ஆசிரியராகத் தொழிற்பட இருக்கும் அவர் மனம் திறந்து கூறும் செய்திகள்.**

### அறிமுகம்

நான் முன்னைய நாள் அல்வாய் வடக்கு செல்லையா விதானையாரின் பேரனும், பழனிப்பிள்ளை விதானையாரின் மகனுமாவேன். எனது மாமா முன்னாள் பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு.பொன்.கந்தையா (COMMUNIST) ஆவார்.

### ஆசிரியராகப் பிரவேசம்

க.பொ.த. உயர்தர வகுப்பில் படிக்கும் போதே எனக்கு ஆசிரியராக வரவேண்டும் என்ற அவா இருந்தது. எனக்கு தெரிந்ததை மற்றவனுக்கு தெளிவாகச் சொல்லிக் கொடுக்கக் கூடிய ஆற்றல்இருந்தது. எனது தந்தை என்னை *பிரக்கிராசிக்கு* படிக்க சொன்னார். ஆனால் எனக்கு அதில் நாட்டம் இருக்கவில்லை.

1970ஆம் ஆண்டில் ***சித்தி உறுதி அன்றேல் பணம் வாபஸ்*** என்ற கவர்ச்சிகரமான விளம்பரத்தை முன்வைத்து க.பொ.த சாதாரண வகுப்பு மாணவர்களுக்கு விஞ்ஞான பாடங்களுக்கான ***ரியூசன்*** வகுப்பை வதிரி இரும்பு மதவடியில் உள்ள ஒரு வீட்டில் ஆரம்பித்தேன்.

எனக்கு ஆசிரிய தொழில் ஈடுபாட்டை ஏற்படுத்திய ஆசான்களில் மூவரை குறிப்பாகக் குறிப்பிடலாம். நெல்லியடி M.M.V யில் எனக்கு பௌதீகம் போதித்த மறைந்த இராசரத்தினம் ஆசிரியரும் தமிழ்போதித்த ***சுகணா*** என அழைக்கப்பட்ட சு.கணபதிப்பிள்ளையும் ஆவார்கள். மூன்றாவது ஆசான் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் விலங்கியல் போதித்த திரு.P. கனகசபாபதி ஆவார்.

### திசை மாறிய துறை

1973ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது விஞ்ஞான ஆசிரியராக வரவேண்டும் என்ற அவாவில் விஞ்ஞானத்துறைக்கு (Bio Science) விண்ணப்பித்த போதும் விவசாய விஞ்ஞான பீடத்திற்கு (Agriculture Science) தெரிவு செய்யப்பட்டேன். பேராதனைப் பல்கலைக்கழகக் கல்வி பல தரப்பட்ட பீடமாணவர்களது நட்பைப் பெற எனக்கு வழி வகுத்தது. 1977இல் விவசாய விஞ்ஞானப்பட்டதாரியாக வெளியேறினேன். விவசாய விஞ்ஞானப்படிப்புக்கு பல வேலை வாய்ப்புகள் இருந்த போதும் ஆசிரியர் தொழிலால் உந்தப்பட்ட நான் 1977இல் இருந்து 1981 இல் முதல் நியமனம் கிடைக்கும் வரை ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டேன்.

### மீண்டும் ஆசிரியத்தொழில்

1978இல் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் வசதிகள் சேவைகள் கட்டணத்தில் படிப்பித்தேன். இக்காலப்பகுதியில் தற்சமயம் கொழும்பில் புகழ் பெற்ற உயிரியல் ஆசிரியராகக் கருதப்படும் V. குகாதரனுடன் இணைந்து யாழ். மாவட்டத்தில் உள்ள பிரபல்யமான தனியார் கல்வி நிறுவனங்களில் காலை 5 மணிதொடக்கம்மாலை8.00மணிவரைஓய்வுஉறக்கமின்றி தாவரவியல் பாடத்தை போதித்து வந்தேன்.

### LIVER POOL ACADEMY

இக் காலப்பகுதியில் தான் நெல்லியடி M.M.V. க்கு முன்னாள் சின்னண்ணா என்று அழைக்கப்பட்ட ஆங்கில ஆசிரியர் கந்தசாமியால் ஆரம்பிக்கப்பட்ட Liver pool Academy யில் க.பொ.த உயர்தர வகுப்பை நிர்வகிக்கும் பணியை நான் ஏற்றுக் கொண்டேன். மற்றைய வகுப்புக்களை கண்காணிக்கும் பொறுப்பு நெல்லியடி Maths Center நிர்வாகியான மறைந்த திரு.விமலன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

### முதல் நியமனமும் மலையக சேவையும்

1981 இல் நிரந்தர நியமனம் பெற்று மலையகம் சென்றேன். எனது முதல் நியமனப் பாடசாலையான நு/கைலன்ஸ் கல்லூரி, அட்டனில் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம் என்பனவற்றை நான் ஒருவனே போதித்தேன். பௌதிகவியல் பாடத்தை ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர் திரு.மு.பரஞ்சோதி அவர்கள் போதித்தார். அப் பாடசாலையில் இருந்து 3 மாணவர்கள் மருத்துவ பீடத்திற்கும் பல மாணவர்கள் வேறு பீடங்களுக்கும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1985 இல் மஸ்கெலியா சென்ஜோசப் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றேன். அங்கு கணித பாடம் போதிப்பதற்கு தகுந்த ஆசிரியர்கள் இருக்கவில்லை. எனவே கணித பாடத்தை க.பொ.த சாதாரண வகுப்பு மாணவர்களுக்கும் பாடசாலையை விட்டு நீங்கிய, கணிதபாடத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கும், தனிப்பட்ட வகுப்புக்கள் வைத்து கணித பாடத்தை போதித்து க.பொ.த கணித பாடத்தில் சாதனைக்குரிய பெறுபேற்றை பெற வைத்ததுடன் அப்போது மலையக மக்களுக்கு என வழங்கப்பட்ட 408 ஆசிரியர் நியமனங்களில் கணித பாடச்சித்தியால் 50க்கு மேற்பட்ட மஸ்கெலியா பிரதேச மாணவர்கள் ஆசிரியத் தொழிலைப் பெற வாய்ப்பாகவும் அமைந்தது.

### யாழ் மண்ணிற்கு மீண்டும் வருகை

1987 இல் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மலையகத்தில் இருந்து இடமாற்றப்பட்டேன். என்னை போட்டி மத்தியில் கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் திரு.சிவபாதசுந்தரம் அவர்கள் தன்னோடு இணைத்துக்கொண்டார். அவரது காலம் விக்னேஸ்வரக்கல்லூரியின் வளர்ச்சியில் பொற்காலமாகக் கருதப்பட்டது.

அவரது ஓய்வின் பின் அவரது இடத்தை பிரதியீடு செய்த தற்போதைய வடமராட்சிக் கல்விப் பணிப்பாளர் திரு.வை.செல்வராசா அவர்களும் பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றினார். அவரின் கீழ் பல பாடசாலை அபிவிருத்தித் திட்டங்களுக்கு என்னை மீறிய கடும் உழைப்பை வழங்கிப் பாடசாலையை ஒரு உன்னத நிலைக்கு கொண்டுவர எனது பங்களிப்பைச் செய்தேன்.

அதிபர் ,வை. செல்வராசா அவர்கள் பதவி உயர்வு பெற்று சென்ற பின்னர் நான் விக்னேஸ்வரக் கல்லூரியை விட்டு வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டது.

இது பற்றி அறிந்து என்னை ஹாட்லிக் கல்லூரி அதி பர் திரு. பாலசிங்கம் அவர்கள் தற்போதைய விக்னேஸ்வர அதிபர் திரு. சிவசிதம்பரம் அவர்கள் ஊடாக எனக்கு தன் வேண்டுகோளை தெரியப்படுத்தினார். நானும் எனது விருப்பத்தைத் தெரிவித்து ஹாட்லிக் கல்லூரிக்கும் சென்றேன். என்னை திரு.பாலசிங்கம் அவர்கள் மிக கண்ணியமான முறையில் நடத்தியதுடன் ஒரு தொலைபேசி சேவையை நான் பெறுவதற்கு தன்னாலான உதவியைச் செய்தார்.

இக்காலப்பகுதிகளில் அதிபர் சேவை, கல்வி நிர்வாக சேவைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. ஆனால் Parallel Service என்ற கொள்கை முன் வைக்கப்பட்டு அதன் படி எல்லாச் சேவையும் சமம் என்றும் சம சம்பளத்திட்டம் என்றும் கூறப்பட்டது. இதன் அடிப்படையில் முதல் ஆசிரியர் சேவைக்கு சம்பள அதிகரிப்பும் வழங்கப்பட்டது. இதனாலும் கற்பித்தலில் உள்ள உந்துதலாலும் அதிபர் சேவை, கல்வி நிர்வாக சேவை பரீட்சைகளை உதாசீனம் செய்தேன்.

ஆனால் இவ்வித பரீட்சைகளின் ஊடாகவும் தற்காலிக நியமனங்களில் இருந்தவர்களது பதவி உறுதிப்படுத்தியதன் விளைவாலும் வந்த அதிபர்கள், கல்வி அதிகாரிகளுக்கு, சமூகம் கொடுக்கும் அந்தஸ்தையிட்டு எனது தவறை உணர்ந்த போது ஆசிரியர் தொழிலால் வரும் அங்கீகாரமும் மதிப்புமே நிலையானது என்று எண்ணி எனது மனதைத்தேற்றிக்கொண்டேன்.

ஆனால் இவ்விதமாகக் கல்வித்துறைக்குள் தம்மை நுழைத்துக்கொண்ட அதிபர்கள், கல்வி அதிகாரிகள், கல்விப்பணிப்பாளர்களால் தினம் தினம் அறிமுகப்படுத்தப்பட்ட அவர்களுக்கே உரிய கல்விச்சித்தாந்த கொள்கைகளாலும் சுற்று நிருபங்களாலும் நான் *பொறி* கலங்கிப்போனேன். அன்றைய நாட்டின் அரசியல் நிலை என்னை ஊமையாக்கியது. சாப்பிடுவதற்கும்,பாடங்களைப்படிப்பிப்பதற்கும் மட்டுமே வாய் திறந்தேன்.

### விசேட தகைமை

இக் காலப்பகுதியில் குடாநாட்டில் இருந்து தாவரவியல் பாடமதிப்பீட்டுக்கு நான் ஒருவனே கொழும்பு சென்று வந்தேன். அதுபோன்று தேசிய கல்வி நிறுவனத்தால் நடத்தப்படும் கருத்தரங்குகளுக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து நான் ஒருவனே சென்று வந்தேன். விக்னேஸ்வரக்கல்லூரி, ஹாட்லிக் கல்லூரியில் எனது காலப்பகுதியில் தாவரவியல் பாட சித்திப் பெறுபேறு 90 % மேற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கல்வி வலயம் II இன் தாவரவியல் வள ஆளணியியலாளராக சேவை செய்தேன். ஹாட்லிக் கல்லூரியின் மறைந்த முன்னாள் அதிபர் திரு.வேணுகோபால் அவர்கள் அதிபராக இருந்த போது பரீட்சை ஆணையாளர் என்ற பதவியைத் தந்து எனது ஆற்றலை வெளிப்படுத்த வாய்ப்புத்தந்தார். அவரது மறைவு எனக்கு இன்னும் மன வேதனையை தந்து கொண்டிருக்கிறது.

### சனி பார்வை ஆரம்பம்

11.4.1997இல் நடைபெற்ற தாவரவியல் கருத்தரங்கில் பங்குபற்றிய ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் ஒரு வருடத்திற்கு மேலாகியும் கொடுக்காததால் கருத்தரங்கை ஒழுங்கு செய்த வள ஆளணியர் என்ற முறையிலும், கல்வித்திணைக்களத்திற்கு பல தடவைகள் முறையிட்டும் நிவாரணம் கிடையாததாலும் பத்திரிகையில் ***ஒரு வருடமாகியும் இன்னும் இல்லை*** என்ற தலைப்பில் வாசகர் திருமுகம் என்ற பகுதியில் 13.5.1998இல் எழுதிய கடிதத்தினால் கல்வித் திணைக்களத்தின் அதிரடி நடவடிக்கைகளுக்கும் இன்னல்களுக்கும் ஆளாக்கப்பட்டேன்.

க.பொ.த. உயர்தர வகுப்பில் 20 வருடங்களாக படிப்பித்த என்னை க.பொ.த. உயர்தர வகுப்புக்களுக்கு படிப்பிக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டேன். வள ஆளணியினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டேன். இதனை ஆட்சேபித்து வலயம் II ஐச் சேர்ந்த பல தரப்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 35க்கும் மேற்பட்ட விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்கள் எழுத்து மூலம் என்னை மீண்டும் வள ஆளணியினராக நியமிக்க வேண்டும் எனக் கேட்டபோதும் கல்வித்திணைக்களம் தனது முடிவில் மாற்றம் செய்யவில்லை.

### கொடுமையில் கொடுமை

க.பொ.த உயர்தர வகுப்பில் இருந்து என்னை நீக்கிய பின்னர் நான் வகுப்பாசிரியராக வகுப்பு மாணவர்கள், கல்விச்சுற்றுலா சென்ற போது கல்வியில் முத்துக்கள் என்று கருதப்பட்ட ஹாட்லிக்கல்லூரி மாணவர்கள் 4 பேரை கடல் காவு கொண்டுவிட்டது. இது எனது மனதை நன்கு பாதித்தது. இதனைத் தொடர்ந்து பாடசாலை நிர்வாக மாற்றத்தால் ஏற்பட்ட பலதரப்பட்ட நெருக்கடிகளால் கட்டைவேலி மெ.மி. த.க. பாடசாலைக்கு இடமாற்றத்தில் சென்றேன்.

இதே சமயம் எனது மனதைத் தாக்கிய இன்னொரு விடயத்தை குறிப்பிட வேண்டும். எனது உற்ற நண்பனாக விளங்கிய கிழக்குப்பல்கலைக்கழக உபவேந்தராகத் திகழ்ந்த திரு. எஸ்.ரவீந்திரநாத் அவர்கள் கடத்தப்பட்டு இதுவரை விடுவிக்கப்படவில்லை என்பது யாவரும் அறிந்ததே. அவரை விடுவிக்கும்படி ***தமிழ் அன்னையின் பெயரால் வேண்டுகோள்*** என்ற தலைப்பில் ***வலம்புரி*** பத்திரிகையில் பகிரங்க வேண்டுகோளை விடுத்தேன். ரவீந்திரநாத்துடன் இருந்த நட்புக்கு இலக்கணமாக எனது மகனுக்கும் ரவீந்திரநாத் என்ற பெயரைச் சூட்டியதுடன் 'RAVEENS' என்ற கல்வி நிறுவனம் ஒன்றை ஸ்தாபித்து அதனை வழி நடத்துவதால் எனது நண்பனின் பெயர் நிலை நிறுத்தப்படும் என்பது எனது அற்ப ஆசை.

### சனி பார்வையின் உச்சம்

கட்டைவேலி மெ.மி.த.க. ஆரம்பப்பாடசாலையில் இருந்து மீண்டும் இடமாற்றம் செய்யப்பட்டேன். ஒரு மாதத்தில் 3 இடமாற்றக் கடிதங்கள் வெவ்வேறு பாடசாலைகளுக்குப் போடப்பட்டு இறுதியில் கரவெட்டி ஸ்ரீநாரதா பாடசாலைக்கு இடமாற்றப்பட்டேன். இப் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதற்கு குறிப்பான உள் நோக்கத்தை இடமாற்றிய கல்விப் பணிப்பாளர் கொண்டிருந்தார். இது ஒரு கஷ்ட நிவாரண படி வழங்கப்படும் ஒரு பாடசாலை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இடமாற்றம் ஒரு தண்டனைக்குரிய இடமாற்றம். எனக்கு இந்த சொற்ப விஞ்ஞான அறிவை மறக்கச் செய்ய கல்வித் திணைக்களத்தால் மேற்கொண்ட நடவடிக்கை என எண்ணிக்கொண்டேன்.

இந்த இடமாற்றத்தை எதிர்த்து பலதரப்பட்டவர்களுக்கு முறையிட்டு எவ்வித பயனும் இல்லாது போக மனித உரிமை ஆணைக்குழுவிற்கு முறையிட்டு ( HRC/J/FR/O5/1775 ) அதற்குரிய நடவடிக்கை இன்னும் முற்றுப்பெறவில்லை. இவ்விசாரணைக்காகச் சென்ற *(ஓட்டோ)* விற்கான செலவு ரூபா 30ஆயிரத்தை (30,000/=) தாண்டி விட்டது. ஆனால் பிரதிவாதி திணைக்கள வாகனங்களில் எவ்வித செலவும் இன்றி வந்து செல்கிறார்.

இக்காலப்பகுதியில் ஸ்ரீ நாரதா பாடசாலைக்கு இடமாற்றத்தில் செல்ல விரும்பாமல் ஓய்வுபெற தீர்மானித்தேன். பேராதனைப் பல்கலைக்கழக சமகாலத்திற்குரியவரும், நண்பருமான, மாகாணக் கல்விப்பணிப்பாளர் திரு .இராசையா அவர்கள் ஓய்வு பெற்று செல்லும் எனது தீர்மானத்திற்கு அனுமதிக்கவில்லை. எனக்கு எவ்வித இடர்வரினும் அதனைப் பார்த்துக் கொள்வதாக உறுதி கூறியமையால் ஓய்வூதியம் பெறும் எண்ணத்தைக் கைவிட்டேன்.

கல்வித் திணைக்களத்துடன் எனக்கு முரண்பாடு இருந்தபோதும் கல்விச் சமூகத்துடன் என்னை இணைத்துக்கொள்ள இரு பாடசாலைகளுக்கான அதிபர் வெற்றிடத்திற்கு விண்ணப்பம் கோரிய போது நானும் விண்ணப்பித்தேன். எனக்கு தகைமை இல்லை என்று என்னை நிராகரித்து விட்டனர்.

நான் அதிபரினதும், கல்வித்திணைக்களத்தினதும் பல சவால்களை (challenges) எதிர்நோக்க வேண்டியதாயிற்று. குறிப்பாக எனது சம்பளப் பணத்தை எனக்கு தர மறுத்து அதனை கல்வித் திணைக்களத்தில் ஒப்படைத்தல், சம்பள இடை நிறுத்தம் , பாடசாலைக்கு சமூகம் அளித்த நாட்களை விடுமுறை நாட்களாக பதிவு செய்தல், வரவு பதிவேட்டில் கையெழுத்து வைக்க விடாமல் தடுத்தல், விஞ்ஞானத்துறையுடன் தொடர்பற்ற உளவள ஆலோசகர் மூலம் என் கற்பித்தலை மேற்பார்வை செய்தல் போன்றவற்றையும் விசாரணைகள் என்ற தோரணையில் பொலிஸ் விசாரணை, திணைக்கள விசாரணை,மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் விசாரணைகளையும் சந்தித்தேன்.

இவை அனைத்தையும் விட பாடசாலை வளவில் நான் கடமையில் உள்ள போது வெளியார் ஒருவரது தகாத வார்த்தைப் பிரயோகத்திற்கும்,தாக்குதல் முயற்சிக்கும், உயிர் அச்சுறுத்தலுக்கும் ஆளானேன். இது தொடர்பான முறையீட்டை பல தரப்பட்டவருக்கும் அறிவித்த போதும் எவ்வித பயனும் கிடைக்க வில்லை. அரச ஊழியர் கடமைக்கும் மதிப்பளிக்க வில்லை.

### விழலுக்கு இறைத்த நீர்

எனக்கு பல்வேறு பட்ட காலங்களில் ஏற்பட்ட பல்வேறு இன்னல்களை முறையற்ற நடவடிக்கைகளை அரசியல் உயர் தலைமைப்பீடம், கல்வி அமைச்சு கல்வித்திணைக்கள பலதரப்பட்ட அதிகாரிகள், நீதித் துறையுடன் தொடர்பான நீதியை அமுல் நடத்தும் நிறுவனங்களுக்கு முறையிட்ட போதும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை. நான் முறையிட்ட கடிதங்களை பதிவு செய்வதற்கான தபால் கட்டணமே ரூபா 4 ஆயிரத்தை(4000/=) தாண்டி விட்டது என்பது குறிப் பிடத்தக்கது.

இறுதியில் ஓய்வூதியம் பெறும் இத் தறுவாயில் கூட நீதிமன்ற விசாரணைக்கு அழைக்கப்பட்ட நிலையிலும் ஓய்வூதியம் கிடைக்குமா என்ற ஐயப்பாட்டான நிலைக்கு நான் கல்வித்திணைக்களத்தினால் ஆளாக்கப்பட்டுள்ளேன் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய குடாநாட்டு கல்வி தரக்குறைவுக்கான காரணம்

1.கல்வியை போதிக்கும் ஒரு பகுதி ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகளின் மேலாதிக்கத்தை எவ்விதம் எதிர்கொள்ளலாம் என்பதை எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். மற்றைய ஆசிரியர்கள் எவ்விதம் அதிபரை, கல்வி அதிகாரிகளை மனம் குளிரச் செய்யலாம் என எண்ணிக் கொண்டு இருப்பதால் தாங்கள் கற்பிக்கப்பட வேண்டிய பிள்ளைகளின் கல்வி பற்றி பெரும்பான்மையான ஆசிரியர்கள் சிந்திப்பதில்லை.

2.பொதுவாக சில அதிபர்களை அன்றி கல்வி அதிகாரிகளை ஆசிரியர் சமூகம் அங்கீகரிப்பதில்லை. சில ஆசிரியர்கள் தமது அதிபரின் பெயரைச் சொல்ல கூச்சப்படுகிறார்கள், வெட்கப்படுகிறார்கள். பொருத்தமற்ற ஒன்று அதிபர் ஸ்தானத்தில் இருப்பதாக எண்ணுகின்றார்கள். இந்நிலையில் பாடசாலையில் அதிபரை அங்கீகரிக்கும் ஆசிரியர் கூட்டம் ஒன்றும், அதிபரை அங்கீகரிக்காத ஆசிரியர் கூட் டம் ஒன்றும் என இரு கூட்டங்கள் தங்களுக்குள் முரண்பட்டு கொண்டிருக்கும் போது மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க நேரம் எங்கே?

3.பல தனியார் , அரச, அரசசார்பற்ற நிறு வனங்கள் தங்கள் தனிநபர் விளம்பரத்தை மையப்படுத்தி நிறுவனங்களின் ஊடாக ***உதவி*** என்ற போர்வையில் பாடசாலையை பயன்படுத்தி வருவதால் மாணவர் கல்விச் செயற்பாடு நன்கு பாதிக்கப்படுகிறது என்பது உலகறிந்த பரமரகசியமாகும்.

4. வாழ்நாள் பேராசிரியர்கள் போல கல்வி அதிகாரிகளினதும் வாழ்நாள் கல்வி அதிகாரிகளாக இருக்க முயற்சிக்காமல் புதியவர்கள்,இளைஞர்கள் சிந்தனைகளுக்கு இடமளிக்க வேண்டும்.

5. கல்வி அதிகாரிகள், அரசாங்க ஊழியர்களே. இவர்கள் மக்கள் பிரதிநிதிகள் அல்ல.இவர்கள் மாலை, மேளதாள ஊர்வலங்களுக்கு காட்டும் அக்கறையை கல்வி அபிவிருத்தியில் காட்டுவதில்லை.

### ஆசிரிய சமூகத்திற்கு வேண்டுகோள்

முள்ளில் ***சீலையைப்*** போட்டால் சீலையைத் தான் கவனமாக எடுக்க வேண்டும். இல்லாவிடில் சீலைதான் கிழியும். கல்லுடன் பானை மோதினால் என்ன பானையுடன் கல்லு மோதினால் என்ன உடைவது பானை தான். அது போல ஆசிரியரும் சீலை, பானை போன்ற நிலைக்குரியவர்கள் தான். பிரச்சினை தரும் போது அதிபர்கள், கல்வி அதிகாரிகள் எல்லோரும் தமக்குள் ஏற்றத்தாழ்வு இருப்பினும் பொது எதிரியை எதிர்க்கும் போது நிர்வாகிகள் என்ற தோரணையில் ஒன்று சேர்ந்துவிடுவார்கள். (samebirds flock together) இதனால் ஆசிரிய சமூகம் தான் பாதிக்கப்படும் .உங்கள் ஒற்றுமையே உங்கள் பலம். நம்பிக்கைக்குரிய ஆசிரியர் தொழிற்சங்கம் உருவாக்கப்படல் வேண்டும்.

### எனது சுபாவம்

இன்று நான் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும், எனக்கு ஒரு நிலைத்த அங்கீகாரத்தைப் பெற கல்வித் திணைக்களம் அனுமதிக்கவில்லை. எனது எவ்வித செயற்பாடும் ***பட்ட காலிலே படும் கெட்டகுடியே கெடும்*** என்ற முதுமொழிக்கு அமைய என்னையே பாதித்தது. ***உண்மைக்கு அளவில்லை*** என்ற முது மொழி கூட எனக்கு பொய்மொழியாகிவிட்டது. ஆன போதும் எனது கல்விச் சேவையால் இரு தலை முறைக்கு நான் போதித்து வருவது எனக்கு மன நிறைவைத் தருகிறது. நான் இவ்வித இடர்கள், இன்னல்களை எதிர்நோக்க வேண்டிய காரணம், நான் ஒரு போதும் அநீதி,அட்டூழியம் என்பவற்றுக்கு தலை வணங்காமையேயாகும்.

### எனது விருப்பம்

நான் தற்சமயம் தளர்ந்து நோய்வாய்ப்பட்ட உடலைக் கொண்டு இருப்பினும் தளராத மனதுடன் உழைத்து *RAVEENS* நிறுவனத்தின் ஊடாக எனக்கு ஒரு அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்பதே எனது விருப்பம். இவ்விருப்பத்தை ஈடேற்றுவதற்கு பல தரப்பினரும் குறிப்பாக நியாயவாதிகளும் எனது மாணவ சமுதாயமும், எனது நண்பர்களும் பக்கபலமாக இருப்பார்கள் என்று நம்புவதுடன் நான் வணங்கும் தெய்வங்கள் எனக்கு மனப்பலத்தையும் உடற்பலத்தையும் வழங்கி எந்தவித சவால்களையும் எதிர்நோக்கக்கூடிய ஆற்றலைத் தர வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

திரு. ப.ஈஸ்வரநாதன்.
தொ.பே.:021 226 3321
021 320 5472

# Western Provincial Department of Education

# G.C.E. (O/L) EXAMINATION - 2009

# Model paper - English Language

## Part - I

Time : 01 Hour

**Answer all the questions on this paper itself.**

1. Complete the following job advertisements selecting the correct word from the group of words given within brackets. There are two extra words in each group. One is done for you. (Marks : ½ x 10 = 05, Time : 5 mts)

Services of a (1) ............... Wanted to train (2) cricketers in a school in Gampaha. Apply before 7th December. P.O. Box 25, Gampaha. (cricketers, coach, player, equipment)

(3) ............. needed for a new film Send your application along with a (4) ............ Should be photogenic. Call Darshana on 07122333228 (photograph, camera, actors, script)

Vacancies for five (5).................. in a leading (6) ............... Attractive salaries. Uniforms provided. Call 2260980 (groceries, machines, supermarket, salesmen)

Are you interested in (7) ............ (8) ................ from an expert to handle a (09) ................ effectively. Course fee negotiable. Vindya Photos – Ganemulla (teaching, photography, camera, learning, vision)

An (10) ..................... is wanted to supervise (11) .................. Of a leading hotel in Colombo. Sumudu Constructions. Tel 2299164 (construction, contractor, building, engineer)

### Test 2

Given below are some extracts written by Grade 11 students, about their mothers and the statements the mothers had made. **Match** the extracts with the statements. Write the number of the extract in the space at the end of each statement. (Marks : 05 Marks, Time 5 mts)

***Extracts***

1) Mothers are sort of people who before a film starts send you to bed and say how good the film was in the morning.
2) My mother says I'm good when I'm asleep because then I don't say anything wrong.
3) My mother works hard. She acts like a servant but never asks for fees.
4) The way my mother worries at exams anyone would think she is taking the exam not me.
5) Mothers never die because they live in the hearts of their children.
6) I have a very good mother who makes cakes, puts them in the cupboard and doesn't notice when I eat them.

***Statements***

a) My son loves my food ....................
b) I want my son to be a good educated citizen ....................
c) My son always says the wrong thing at the wrong time. ....................
d) My son always wants to watch TV ....................
e) I would like if I had some help in the house. ....................

### Test 3

Write **five** sentences about the picture



(Marks : 1x5 = 05)

### Test 4

Fill in the blanks with the correct response and complete the dialogue. *The first one is done for you.* (Marks : 05, Time : 5 mts)

Dilini : Sanduni, I've lost my purse. Please help me find it.
Sanduni : Oh! Dear (1) where did you drop it?
Dilini : I don't know it was in my shirt pocket when I left home.
Sanduni : In your shirt pocket! (2)..................................
Dilini : No. I didn't drop it. I had it. (3)..........................
Sanduni : Well (4) ............. or did you go to the canteen?
Dilini : To the canteen of course. I ate a bun and drank a cup of tea.
Sanduni : Then (5) ................ and put the purse of the counter.
Dilini : How did you know?
Sanduni : (6) .................... So I picked your purse. Here it is.

did you come straight to school?
I was right behind you
when I got off the bus
where did you drop it?
then you must have dropped it
you paid the cashier

### Test 5

Read the following advertisement and answer the questions given below (Marks : 1x 5 = 05, Time : 5 mts)

**Children's World – Children's Rights**
**Seminar / Workshop**
**On**
**1st of December 2009**
**Organized by**
**Lions - Ganemulla**
**Sponsored by**
**Kalana Tex**

**For whom :** Parents, Teachers, Nurses, Medical Students and all others in the "Caring professions"

**Topics:**

- **'Emotional Balance and personality Development'**
  - Dr. Nihal Weragama – Director – National Child Protection Authority 9.30 am – 11.30 am
- **'Reducing Birth Defects'**
  - Professor – Rohini Jayasekara – Human Genetics Unit, Faculty of Medicine 11.30 am – 1.30 am
- **'Phychic Care During Early Childhood'**
  - Dr. Mrs Wasantha Thilakaratne – Child Psychologist – Lady Ridgeway Hospital 2.30 am – 4.30 am

**Admission Free**
Registration : 9.00 am
**At the main Auditorium**
**Hotel LAKNARA – GAMPAHA**

1. What is the title of the seminar / workshop?..............................................
2. Who has organized it?..............................................
3. Who delivers the first lecture? ..............................................
4. The session at 11.30 am is..............................................
5. What is Mrs Wasantha Thilakaratne? ..............................................

### Test 6

Write paragraph on one of the following. Use about 50 words. (Marks : 05, Time : 10 mts)

a) My favourite TV Programme    b) Use of trees

### Test 7

Read the text and answer the questions given below (Marks : ½x10 = 05, Time : 5mts)

**KINGFISHERS**

The ancient Greeks called the kingfisher 'Halcyon', In Sri Lanka we have seven species of kingfishers. The Indian pied kingfisher, the Ceylon small blue or common kingfisher, the blue eared kingfisher, the three toed kingfisher, the stork – billed kingfisher, the white breasted kingfisher and the black capped purple kingfisher. Of these, six are resident and one – the black capped purple kingfisher is a rare migrant.

The kingfishers are solitary birds but the Indian pied kingfisher is seen quite regularly in pairs.

All kingfishers are carnivorous and as their name implies, live mainly on fish.

The method of catching their prey however has not changed much. The bird makes a sudden dive from a tree into the water or to the ground. Sometimes it darts into the bush too, to catch its prey

Their nests are built not only in holes made in the river banks but also in mounds of earth, anthills and sometimes in a hole in a tree.

1. What were the kingfishers called in ancient time? ..............................
2. How many varieties are found in Sri Lanka? ..............................
3. The kingfisher that visits Sri Lanka is called ..............................
4. Name the variety that lives in pairs ..............................
5. What is their main food ..............................
6. Where do they live? i) .................. ii) .................. iii) ..................
7. How does it catch its prey? i) .................. ii) ..................

### Test 8

You have booked two seats to watch the cricket match at Dambulla Stadium. Write a note to your friend asking to join you. Use about 60 words. (Marks : 05, Time : 10 mts)

**Include :**

- How you hope to travel
- When and where to meet

# Western Provincial Department of Education

# G.C.E. (O/L) EXAMINATION - 2009

# Model paper - English Language

## Part - II Time : 2 hours

### Answer all the questions.

**Test 9**

Read the following text about Sanduni's friend. In each line one word is incorrect and it is underlined. Write the correct word in the space provided. *The first one is done for you.*

(Marks: ½ x 10 = 5, Time: 15mts)

My best friend is Dilini. We meet about twenty two (1. met )
years ago when we were both five years old. It were my (2. ______)
first day on school. I was very unhappy and I wanted mine (3. ______)
mother. Dilini gave me the chocolate and we became friends (4. ______)
immediate. We were always together. We left school twelve (5. ______)
years lately. Then I went into the University and Dilini didn't. (6. ______)
She married while she was twenty and now had three children. (7. ______)
I studied for 5 years because I want to be a doctor. I don't (8. ______)
meet Dilini very often but we always talk on the phone (9. ______)
(10. ______)
(11. ______)

**Test 10**

Write the phrase given in brackets in the appropriate blank to form a meaningful sentence. *The first one is done for you.*

(Marks:05 Time :10 mts)

1. The postman (a) ...........................gave me
   (b) ....................................a letter this morning
   (c) Which really upset me **(Which really upset me)**
2. During our trip (a) ............................to kandy
   (b) ................................ I went to the village
   (c) ..................................... **(Where I was born)**
3. The people (a) ........................moved to Galle
   (b)..........................a long time ago
   (c) ....................................... **(Who lived next door)**
4. My friend Saman (a) .......................... told me a story
   (b) ..........................because, I knew the incident he was referring to (c) ..................**(which I found hard to believe)**
5. Sisira, a boy (a) ......................has had accident
   (b) ...................... and was taken to hospital.
   (c)..............................**(who I went to school with)**
6. Sunil (a) ........................... a few years ago
   (b) .....................is the same age as me.
   (c) .....................................**(Whose parents died)**

**Test 11**

Complete the following paragraph using correct from the words given in brackets.
*The first one is done for you*

(Marks:05, Time :10 mts)

Oliver Twist 's family suffered from (1) poverty (poor). So he was sent to aworkhouse. Oliver Twist and his companions suffered (2) .....................(starve) for three months. At last they got so wild with (3) .................... (hungry) that one boy who was big for his age said, he was afraid that one night he might eat the (4) .................... (weak) lad in the work house. He had hungry eyes and a (5) ...........................(danger) look and other boys were afraid of him. Lots were cast to see who would to the master and ask for more. Oliver was the (6) ........................ (select) one.

**Test 12**

**Read** about the Coggon family. It was hard times for the poor Coggon 's family in the early Victorian England which was nearly all work and no play. **Match** the topics given in the box with paragraphs by writing the correct number in the appropriate cage. There is an extra topic included in the box.

(Marks:05, Time:15 mts)

| Topic | No. |
|---|---|
| How they learned | |
| Changes they saw | |
| Working and eating | |
| Their pastimes | |
| Who they were | |
| Where they lived | |

1. The Coggons were Hannah, Joseph, Roger, and Sally. Their mother had died and their father had been sentenced to prison and was sent to Australia. Like their Uncle Gideon, they all had to work to eat. It was hard life, but it was like that for many poor people in Britain.

2. Grandfather Daniel wove cloth by hand. But his old ways were not as fast as the new machines. At first, to earn money, Hannah tried to be a maid in the rich household. Gideon and Roger helped some workers dig a tunnel for the new railway. They spent the money on potatoes, bread, a little meat and sometimes a pie to cook in the local oven.

3. Sally and Roger learned their letters and sums for the blacksmith. They were luckier than most grown ups in England, nearly half of whom could not write their own names. Later when they lived in town, the children went to Sunday school. Here they were taught religion, but they also studied reading, writing and arithmetic.

4. The children lived in a cottage in the wild countryside. They were happier there than in the workhouse where, like many poor Victorian families, they had to live when their father was in prison. Later they moved to Bradley. Like many new towns, it had too many people. So they shared a dirty house in a slum yard. Pigs and rats lived in the yard with them.

5. The year 1845 was a time of change. Everywhere there were machines that could quickly make many things which before had been made slowly by hand. Roads were tarmacked, and the busy canal system was used less than the new railways. Goods could now move easily across the land and seas. As people were given the vote, slowly the rulers in Parliament learned to listen to what the people said.

**Test 13**

**Read** the given text. **Fill** in the blanks with suitable words given in the box. There are three extra words.

(Marks: 1/2 x 14 = 7 marks)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| but | fond | in | it | my | no | over | on | old |
| photograph | road | some | the | than | was | when | with | |

One day when I got home, tired after a morning's shopping, I found I had lost my purse. I at once retraced (1) .......................... steps as far as (2) .................... Chemist's in the main (3) ............................ Where I had bought (4) .................... medicine but there was (5) .......................sign of the purse (6) ...................... the pavement. Luckily there (7) ................. Not much money in (8) ................, only (9)........................... small coins. It also contained a (10) ...................... of my daughter, taken (11) ....................... she was twelve years (12) ............... which I was very (13)................. of and always carried (14) ........................ me.Later in the day I called at the police station to inquire if the purse had been found. I was pleased to learn that someone had handed it in.



யாழ். கல்வி வலய விசேட கல்விப் பிரிவு நடத்திய உலக மாற்று வலுவுள்ளோர் தின விழா நேற்று யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவதையும், வித்தியாலய அதிபர் எஸ்.சத்தியபாலன் மங்கல விளக்கேற்றுவதையும், யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் த.இராஜலிங்கம் உரையாற்றுவதையும், திருக்குடும்பக் கன்னியர்மட பாடசாலை மாணவியின் கலை நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:அலுவலகச் செய்தியாளர்)

# வடக்கு மக்களின் மேம்பாட்டுக்காக நூறு கோடி ரூபா கடனுதவி

## இலங்கை மத்திய வங்கி ஆளுநர்

வடக்கு மக்களுக்கு சுமார் நூறு கோடி ரூபா கடனாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்த மாதத்தில் சுமார் நூறு கோடி ரூபா பணம் வடக்கு மக்களுக்கு கடனாக வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வங்கிகளின் ஊடாக வடக்கு மக்களின் வாழ்க்கையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளதோடு கடன் வழங்குவதன் ஊடாக வடக்கு மக்களின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஓ-6)

# திஸ்ஸநாயகத்தின் மேன்முறையீடு தொடர்பாக சட்டமா அதிபருக்கு அழைப்பாணை

கொழும்பு)

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றத்திற்காக இருபது வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் எஸ்.ஜே. திஸ்ஸநாயகத்திற்குப் பிணை பெறும் பொருட்டுத் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பாக சட்டமா அதிபருக்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

மேன் முறையீட்டு நீதிபதிகளான சிசிர டி ஆப்றூ மற்றும் உப்பாலி அபேரத்ன ஆகியோர் முன்னிலையில் இந்த மனு கடந்த புதன்கிழமை பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்டமா அதிபரை எதிர்வரும் 16 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தெரிவித்தே இந்த அழைப்பாணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்துள்ளது. (ஓ-6)

யூனியன் அஷ்யூரன்ஸ்
UNION ASSURANCE 'ஆயுட்காலம் முழுவதற்கும் ஆதரித்து நிற்பவர் நாம்'

யூனியன் அஷ்யூரன்ஸ் மிகப் பெரும் வர்த்தக நிறுவனங்களில் ஒன்றான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ்PLCயின் பலத்தினதும், உறுதிப்பாட்டினதும் பின்னணி ஆதரவுடன் இயங்கும் காப்புறுதித் துறையில் 22 வருடங்களைக் கடந்த நிறுவனமாகும்.

எமது எதிர்பார்ப்பு...
யாழ். குடாநாட்டில், வடமராட்சியும் அதனை அண்மித்த பகுதிகளில் இருந்து பின்வரும் பதவிகளோடு எமது அணியில் ஆற்றல் வளமும், பெறுபேறுகளைப் பெற்றுத்தரும் திறனும், விடா முயற்சியும் திறமையும் உள்ள இளைஞர், யுவதிகளை இணைத்து எமது வடமராட்சி மக்களுக்கு திருப்திகரமான காப்புறுதி சேவையினை வழங்குவதாகும்.

கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கப்படவுள்ளது.

பதவி வெற்றிடங்கள்

சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி - 5
பதவி - 4 ← தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
தனிப்பட்டோர் நிதி ஆலோசகர் → பதவி - 2
பதவி - 3 ← சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
காப்புறுதி ஆலோசகர் → பதவி - 1




தகைமை: க.பொ.த. சாதாரணதரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி (ஆகக் குறைந்த தகைமை)

A/L பரீட்சையின் முடிவுகள் உங்கள் எதிர்பார்ப்பினை நிறைவேற்றவில்லையா?
கவலை வேண்டாம் எமது யூனியன் அஷ்யூரன்ஸ் குடும்பம் உங்களை அரவணைத்து தொழில் பாதுகாப்பை
வழங்கி உங்களது சுயமுன்னேற்றத்திற்கான வருமானத்துடன் சுவய அரிய சந்தர்ப்பத்தை வழங்கவிருக்கிறது.

வன்னிப் பகுதியிலிருந்து வந்து வேலையற்று இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

தவறாமல் தோற்றுங்கள் நேர்முகத் தேர்விற்கு உங்களது சுயவிபரக் கோவையுடன்

நேர்முகத் தேர்வு
காலம் :- 07.12.2009 (திங்கட்கிழமை)
நேரம் :- முற்பகல் 9.30 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ், பிரதான மண்டபம், இராகுலசூரியர் கட்டடத் தொகுதி, பருத்தித்துறை.

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் சர்வதேச தரத்திலான தொழில்தகைமை சான்றிதழை பெற்று காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

தொடர்புகளுக்கு :- தொ.பே. 0775396645, 011 3158153
N.V.மூர்த்தி
அபிவிருத்தி உத்தியோகத்தர்

(C-3814)

# பொன்சேகாவின் கோரிக்கைக்கு நீதிமன்றம் அனுமதி மறுப்பு

முன்னாள் கூட்டுப்படைகளின் கட்டளைத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட முடியாது என சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் நீதிமன்றில் அறிவித்துள்ளார்.

கூட்டுப்படைகளின் கட்டளைத்தளபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்றதன் பின்னர் கோரப்பட்ட பாதுகாப்பு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலதிக பாதுகாப்பை வழங்குமாறு ஜென்ரல் சரத்பொன்சேகா விடுக்கும் கோரிக்கை சட்டத்திற்கு புறம்பானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் எனவும், உத்தியோகபூர்வ இல்லத்தில் இன்னும் சில காலம் தங்கியிருக்க அனுமதி அளிக்கப்படவேண்டுமெனவும் தெரிவித்து ஜெனரல் பொன்சேகா நீதிமன்றில் தகவல் செய்திருந்த மனு மீதான விசாரணைகளின் போது சட்டமா அதிபர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-6)

# மறைந்திருக்கும் கண்ணிவெடிகளால் மீள் குடியேறும் மக்களுக்கு ஆபத்து

## கண்ணிவெடி ஆலோசனைக் குழுவின் தலைவர்

(கொழும்பு)

நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்படாத சூழ்நிலையில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேற்றப்படுகின்றமை குறித்து கண்ணிவெடி அகற்றும் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. இதனால் மக்களுக்கு தவிர்க்க முடியாதபடி உயிரிழப்புகளும் காயங்களும் ஏற்படப் போகின்றன என எச்சரித்துள்ளன.

சர்வதேச செய்திச் சேவை ஒன்றுக்கு அளித் துள்ள பேட்டியில் நிலக் கண்ணிவெடி ஆலோ சனைக்குழுவின் தலைவர் லெவெலைன் ஜோன்ஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அச் செய்திச் சேவை மேலும் தெரி வித்துள்ளவை வருமாறு,

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேற்றப்படவுள்ள நிலையில் அவர்களது பகுதிகளில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது பணிகளைத் துரிதப்படுத்த வேண்டிய அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்றார். கண்ணிவெடிகள், மரங்கள், வீடுகள், வீதியோரங்களிலும் புதைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் சில காலமாக மக்கள் வாழாதமையால் நிலக் கண்ணி வெடிகள் குறித்த உள்ளூர்த் தகவல்களைப் பெறுவதும் அவை எங்கு புதைக்கப்பட்டுள்ளன என்பதை இனம் காண்பதும் கடினமாகவுள்ளதாகவும் மோதல் நடைபெற்ற கிராமங்களில் கிணறுகள் வெடிக்காத வெடிபொருட்கள் நிரம்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஓ-6)

# அமெரிக்க விசா வழங்கும் பிரிவு இடமாற்றம் அமெரிக்கத் தூதரகம் அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் விசா வழங்கும் பிரிவான ரிரி சேவிஸ் லங்கா பிறைவேட் லிமிட்டெட் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி முதல் இவ் அலுவலகம் இல 51 ,ஏ தர்மபால மாவத்தை, கொழும்பு 07 இல் முன்னைய (எச்.எஸ்.பி.சி. அலுவலகம்) செயற்பட்டு வருவதாக அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

எனினும் தொலைபேசி மற்றும் இலக்கம் போன்றவற்றில் மாற்றம் பக்ஸ் (FAX) இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை இணையத்தள முகவரியூடாகவும் 2437840/ 2437841 என்ற தொலைபேசி இலக்கம் பக்ஸ் இலக்கம் 2437844 மற்றும் ifo @ttsusvisas என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியுமென கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது. (ஓ-6)

## ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக

# ஐந்து தீர்மானங்கள் குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆராய்வு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது எடுக்கக் கூடிய ஐந்து தீர்மானங்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சி ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இதுவரையில் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் வாரத்தில் நடைபெறவுள்ள பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனக் குறிப்பிடப்படுகிறது.

பிரதான வேட்பாளர்களில் ஒருவருக்கு ஆதரவு வழங்க வேண்டும், இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கும் ஆதரவு அளிக்கக் கூடாது, தமிழ் மக்கள் தாங்களாகவே தீர்மானிக்க வேண்டும், விக்ரமபாகு கருணாரட்னவிற்கு ஆதரவளித்தல், ஜனாதிபதித் தேர்தல்களை புறக்கணித்தல் ஆகிய ஐந்து சாத்தியங்கள் குறித்து ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# இன்று ஒரு தகவல்

## எதிர்காலத்தின் அடிமைகள்

ஒரு ஆட்டுக்குட்டியின் கழுத்தில் கயிற்றைக் கட்டி ஒருவன் இழுத்துக்கொண்டு போகிறான். அதுவும் அவன் பின்னால் போய்க்கொண்டிருக்கிறது.

''எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?'' என்று அவனைப் பார்த்துக் கேட்டார் ஒரு பெரியவர்.

''சந்தைக்கு இழுத்துக் கொண்டு போகிறேன்'' என்றான்.

''எதற்கு'' என்றார்.

''நாளைக்கு எங்கள் வீட்டில் ஒரு விசேஷம். அதற்குச் செலவுக்குப் பணம் வேண்டும். அதுதான் இதை இன்றைக்கு விற்றுவிட்டால்,நாளைக்கு அதை நல்லபடியாகக் கொண்டாடலாம்'' என்றான்.

இப்படிச் சொல்லிவிட்டு அந்த ஆட்டுக்குட்டியை இழுத்துக் கொண்டு போய்விட்டான்.

இப்பொழுது அந்தப் பெரியவர் சொன்னார்:

''அந்த ஆட்டுக்குட்டியை அவன் எப்படி இழுத்துக் கொண்டு போகிறானோ அதே மாதிரி தான் அவனை எதிர்காலம் இழுத்துக்கொண்டு போகிறது'' என்றார்.

அவர் சொல்லும் அந்தக் கருத்துக்கு விளக்கம் என்னவென்றால்...

நாளைக்கு அவனது வீட்டில் நடக்கப்போகும் விசேஷம் தான் இன்றைக்கு அவனைச் சந்தைக்குப் போக வைக்கிறது. நாளைக்குப் பலன்கிடைக்குமே என்பதற்காக அவன் இன்றைக்குப் பாடுபடுகிறான்.

எதிர்காலப்பலனை எதிர்பார்த்துச் செய்யும் செயல் இது. இந்தச் செயலைத்தூண்டுவது அந்த எதிர்காலம் தான்.

கழுத்தில் கயிறு கட்டப்பட்ட ஒரு விலங்கு இழுத்துச் செல்லப்படுவது போல எதிர்காலம் நம்மை இழுத்துக் கொண்டு போகிறது என்கிறார் ஓஷோ.

மனிதனுடைய செயற்பாடு எப்படி இருக்கிறதென்றால்... அவனுடைய கண்பார்வை எதிர்காலத்தில் இருக்கிறது. கையின் செயற்பாடு நிகழ்காலத்தில் இருக்கிறது. அதாவது செயல் நிகழ்காலத்தில் இருக்கிறது. பலன் எதிர்காலத்தில் இருக்கிறது.

ஆனால் எதிர்காலம் என்பது அறியப்படாமல் இருக்கிறது. நிச்சயமில்லாமல் இருக்கிறது. எதிர்காலம் என்று சொல்கிறோமே தவிர அது இப்பொழுது இல்லாத ஒன்று. அது ஒரு நம்பிக்கை. ஒரு கனவு... ஒரு எதிர்பார்ப்பு... அவ்வளவு தான்.

அந்த நம்பிக்கையில் தான் நாம் எதிர்காலம் நோக்கி இழுத்துச் செல்லப்படுகிறோம்.

விலங்குக்கு வடமொழியில் பசு என்று பெயர். பசு என்றால் பாசம், விலங்கு, தளை என்று அர்த்தம். 'பசு' – பிடிக்கப்பட்ட ஒன்று. அடிமையான ஒன்று. அந்த அர்த்தத்தில் தான் நாமெல்லாம் பசுக்கள்.... காரணம், நாம் எதிர்காலத்தின் அடிமைகள். எதிர்கால நம்பிக்கையில் வாழ்பவர்கள் – என்கிறோர் ஓஷோ.

நமது வாழ்க்கையின் மூக்கணாங்கயிறு எதிர்காலத்தின் கைகளில் இருக்கிறது.

மனிதன் இன்றைக்கு வாழ்வதெல்லாம் எதிர்காலத்தின் நம்பிக்கையில் தான். நாளைக்கும் சுட. அவன் அதற்கு அடுத்த நாளின் நம்பிக்கையில் தான் வாழப் போகிறான்.

எதிர்காலத்தில் வாழ்வதற்காக அவன் ஒவ்வொரு நாளையும் தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறான். அப்படியே போய் இவனுடைய வாழ்வு முழுமையாக வாழப்படாமலே போய்விடுகிறது. கடைசியில் ... நினைத்துப் பார்ப்பான்.

''காலமெல்லாம் வாழ ஆசைப்பட்டேன். ஆனால் உண்மையில் நான் வாழவே இல்லையே!'' என்று நினைத்து வருத்தப்படுவான். வாழ்க்கையைப் புரிந்து கொள்ளாத மனிதர்கள் இப்படித்தான் வீணாகப் போய் விடுகிறார்கள்.

இந்தத் தகவலின் ஆரம்பத்தில் ஒருவன் ஆட்டுக் குட்டியின் கழுத்தில் கயிற்றைக்கட்டி இழுத்துக் கொண்டு போனான் அல்லவா... அவனது கழுத்தில் துணியைக் கட்டி இன்னொருவன் இழுத்துக் கொண்டு வந்தான்.

"என்ன ஆச்சு?" என்று விசாரித்தார் அந்தப் பெரியவர்.

"இவர் தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றி நினைத்துப் பார்த்தானே தவிர என்னுடைய எதிர்காலத்தைப் பற்றி நினைத்துப் பார்த்தானா?'' என்றான் அவன்.

''இவன் என்ன தப்பு செய்தான்?'' என்று கேட்டார் பெரியவர்.

"எங்கள் வீட்டிலிருந்து திருடிக் கொண்டுபோன ஆட்டுக்குட்டியை சந்தைக்கு ஓட்டிக் கொண்டு வந்து... என்னிடமே விலைபேசி விற்கிறான் சேர்'' என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கை மின்சார சபை

## மாற்று மின்சக்தியை அறிமுகப்படுத்தத் திட்டம் ஆரம்பிக்க முன்வருவோர்க்கு பல சலுகைகள்

### மின்சக்தி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் மின்சாரத் தேவையை இலக்காகக் கொண்டு மாற்று மின்சக்திகளை அறிமுகப்படுத்த இலங்கை மின்சாரசபை ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இத் திட்டத்தின்கீழ் சிறிய அளவிலான மின் திட்டங்கள் உயிர் வாயுப் பிரிவு என்பவற்றை விஸ்தரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் மூலம் தேசிய மின் கட்டமைப்பிலிருந்து மின்சாரத்தை வழங்க முடியாதுள்ள பிரதேசங்களை ஆராய்ந்து கண்டறிந்து அத்தகைய பிரதேசங்களில் இத் திட்டங்களை நடைமுறைப்படுத்த இலங்கை மின்சாரசபை ஏற்பாடுகளைச் செய்துள்ளதோடு அவ்வாறான திட்டங்களை ஆரம்பிக்க முன்வருவோருக்கு கடன் மற்றும் நிவாரணங்களை வழங்குவதற்கும் இத்திட்டங்களைப் பராமரிக்கும் பொறுப்பை பயன்பெறும் குடும்பங்களிடமே கையளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மின்சக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் இந்தப் பிரதேசங்களில் உள்ள சுயதொழில் முயற்சியாளர்களை சிறு தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்துவதே இதன் முக்கிய நோக்கமென மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஓ-6)

# இலங்கை வங்கி திருநெல்வேலிக் கிளையில் சனிக்கிழமை வங்கிச் சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைவங்கியின் திருநெல்வேலிக்கிளையில் சனிக்கிழமைகளிலும் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அத்தினங்களில் தங்கநகை அடகுச்சேவையும் இடம்பெறும் என மேற்படி வங்கிக்கிளையினர் தெரிவித்துள்ளனர்.

நாளை சனிக்கிழமை இலங்கை வங்கியின் வட பிராந்தியத்திற்கான உதவிப்பொது முகாமையாளர் ந.சிவரட்ணத்தால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இந்நிகழ்விற்கு இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர் வி.எஸ்.சிவநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதன் மூலம் வாடிக்கையாளர்கள் பிரதி சனிக்கிழமை தோறும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை வங்கிச் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும் என இலங்கை வங்கியின் திருநெல்வேலிக் கிளை முகாமையாளர் இ.பிரேமராஜன் தெரிவித்துள்ளார். (ஓ)

# சுவரொட்டிப் போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

கரித்தாஸ் நிறுவனத்தால் மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சுவரொட்டிப் போட்டியில் தெரிவானோர் விபரம் வெளியாகியுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

கணேசமூர்த்தி பிரசன்னா (நவாலி தெற்கு), யோசப் காமல் (ஆஸ்பத்திரி வீதி), சந்திரதாசன் சர்மலா (வடலியடைப்பு, பண்டத்தரிப்பு).

**பாராட்டுப் பெறுவோர்**

மகேந்திரன் துஷாந்தன் (சங்குவேலி தெற்கு), மகேந்திரன் கலாரஞ்சினி (இணுவில் மத்திய கல்லூரி.) (ஓ-4)

# வட மாகாண புனரமைப்புக்கு தமிழ் மக்களின் ஆதரவு வேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(கொழும்பு)

வட மாகாணத்தின் மீள் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு தமிழ் மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரியுள்ளார்.

இந்த வேண்டுகோள் தொடர்பான விசேட கூட்டம் ஒன்று எதிர்வரும் ஜனவரி மாதம் 12 ஆம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் போது வடக்கில் மேற் கொள்ளப்படவுள்ள அபிவிருத்திகளின் பொருட்டு செயற்படுத்தப்படும் செயற்திட்டங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது.

இதன்மூலம் மோதல்கள் காரணமாக பாரிய அளவில் பாதிப்பிற்குள்ளான வடபிராந்தியத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஓ-6)

# இராசி பலன்

04-12-2009

(கார்த்திகை 18 வெள்ளிக்கிழமை)

துதியை முற்பகல் 10.34 மணிவரை

திருவாதிரை பின்னிரவு 12.11 மணிவரை

இராகுகாலம் 10.45-12.15 மணிவரை

சுபநேரம் 6.15 - 7.45 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தெய்வ தரிசனம், சகோதரர் உதவி, கீர்த்தி. |
| இடபம் | மனோ சங்கடம், தனவிரயம், கௌரவக்குறைவு, முயற்சி தாமதம். |
| மிதுனம் | வெகுமானம், போசன சுகம், நல்ல முயற்சி, உறவினர் சந்திப்பு. |
| கடகம் | சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், எடுத்த காரியம் தாமதமாகும், சயன சுகக்குறைவு. |
| சிங்கம் | தெய்வ தரிசனம், பொருள் சேர்க்கை, குடும்ப சுகம், காரிய அனுகூலம். |
| கன்னி | அதிக பிரயாசை, தெய்வ தரிசனம், கீர்த்தி, பொருள் சேர்க்கை |
| துலாம் | உத்தியோக பங்கம், எதிர்பாராத செலவு, முயற்சி தாமதம், கோபப் படுதல். |
| விருச்சிகம் | மனக்கவலை, பொருள் விரயம், ஆரோக்கியக்குறைவு, முயற்சி தாமதம். |
| தனுசு | தெய்வ தரிசனம், மனோதைரியம், சயனசுகம், கீர்த்தி. |
| மகரம் | தொழில் நன்மை, உறவினர் வருகை, தெய்வ சிந்தை, காரிய நன்மை. |
| கும்பம் | அஜீரண ரோகம், கௌரவக் குறைவு, தொழில் சிநதை, தனவிரயம். |
| மீனம் | தன்னம்பிக்கைக் குறைவு, வாகன சுகம், முயற்சி தாமதம், பித்த ரோகம். |

வள்ளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100-120 | 160 | 140 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 140 |
| தக்காளி | 60 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 60 |
| கோவா | 100 | 120 | 100 |
| கரட் | 90 | 100 | 120 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 30 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 130 | 160 | 160 |
| பாகற்காய் | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 20 | 30 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 60 | 70 | 60 |
| லீக்ஸ் | 110 | 140 | 120 |
| பீற்றூட் | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 170 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 160 | 180 | 180 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 30 |
| தேசிக்காய் | 90 | 120 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 35 |

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 4 விதி எண் : 3

### உடலமைப்பு

பிறந்த எண் 4, விதி எண் 3 ஆகக் கொண்ட இவர்கள் ராகு, குருவின் ஆதிக்கம் பெற்றவர்களாக இருப்பர். இவர்கள் உயரமானவர்களாகவும், சதைப்பற்றுடனும் காணப்படுவர். கண் பார்வை கவர்ச்சிகரமாக இருக்கும். நீண்ட புருவம் கொண்டவர்களாக இருப்பர். இவர்களின் பற்கள் அழகாக இருக்கும். முன் பற்கள் இரண்டு பெரிதாகக் காணப்படும்.

### மன, குணவியல்பு

இவர்கள் உண்மைக்கும், நேர்மைக்கும் கட்டுப்பட்டவர்களாக இருப்பர். சொன்ன சொல் தவறாதவர். இவர்கள் பிறர் தவறு செய்தாலும் விடமாட்டார்கள். பலரறிய சுட்டிக் காட்டிக் கண்டிக்கும் சுபாவமுடையவர்கள்.

இவர்கள் எதிலும் அவசரப்படமாட்டார்கள். எதையும் நன்றாக யோசித்த பின்பே செயல்படுவர். தங்களின் தகுதிக்குப் பொருந்தாத எந்தச் செயலிலும் இறங்க மாட்டார்கள். அதனால் இவர்களுக்குப் பெரும்பாலும் தோல்வி ஏற்படாது.

எப்போதும் சுறுசுறுப்புடன் காணப்படுவர். இவர்களிடம் சொல்லாற்றல் இயற்கையாகவே இருக்கும். இவர்களிடம் ஈவு இரக்கம் உண்டு. பிறருக்கு உதவும் நல்ல சுபாவம் கொண்டவர்களாக இருப்பர்.

தன்னலத்தோடு பொது நலத்திலும் அக்கறை கொண்டவர்களாக இருப்பர். பிறருக்கு அறிவுரை கூறி நல்வழிப்படுத்தவும் செய்வர். இவர்களிடம் பிறர் மதிப்பு மரியாதையுடன் நடந்து கொள்வர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு நல்ல வாழ்க்கைத் துணை நல்ல குடும்பம், நல்ல புத்திர பாக்கியம் போன்று எல்லாமே நல்ல விதமாக அமையும். அதனால் குடும்பமும் நல்ல முறையில் சந்தோஷத்துடன் இருக்கும். இருப்பினும் ஆரம்பத்தில் பல கஷ்டங்களை அனுபவிக்க நேரும். பின்பே படிப்படியான முன்னேற்றம் உண்டாகும்.

### தொழிலும், வருமானமும்

இவர்களுக்கு இரும்பு, எந்திரம் மற்றும் வாகனங்கள் தொடர்பான தொழில்களில் சிறப்பு உண்டு. இது தொடர்பில் தொழிலதிபர்களாகவோ தொழிலாளர்களாகவோ இருக்கக்கூடும். இவை தவிர சிற்றுண்டிச் சாலை வைக்கக்கூடும். மருந்து மற்றும் இரசாயன சம்பந்தத் துறையில் வியாபாரம் செய்யக் கூடும்.

இவர்களுக்கு பொருளாதாரத் துறையில் ஆரம்பத்தில் கஷ்டம் இருந்தாலும் படிப்படியாக பொருள் சேர்க்கை மிகுதியாகும். இவர்கள் எப்போதும் தகுதிக்கு மீறிய செலவு செய்ய மாட்டார்கள்.

### ஆரோக்கிய நிலை

இவர்கள் இயல்பாகவே தம் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துபவர்களாக இருப்பர். சிறிய நோய் என்றாலும் பெரிதும் கவலைப்பட்டு சிகிச்சை மேற்கொள்வர்.

பொதுவாக இவர்களுக்கு உஷ்ணம் சம்பந்தமான நோய்களே வரும். வாய்வு தொடர்பானதும் மற்றும் மூட்டுவலி, சரும நோய்கள் ஏற்படவும் கூடும்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் சூரியன் ஆதிக்கத்திற்குட்பட்ட 1 ஆவது தொடர்பான விஸ்தார எண்களில் அதிர்ஷ்ட பலன் தரும் ஒன்றில் பெயர் மாற்றம் செய்ய யோகமாகும். தம் நிறுவனங்களுக்குப் பெயரிடவும் இதுவே பொருந்தும்.

இவர்களுக்கு 1,3 யோகம் தரும் எண்களாகக் கூறலாம். இது தொடர்பான திகதிகளும் யோகமானதே.

ஆனால் சனி, சுக்கிரன் ஆதிக்கத்திற்குட்பட்ட 8,6 மற்றும் அது தொடர்புடைய எண்களும், திகதிகளும் பொருந்தாதவை.

## உடல் எண் : 4 விதி எண் : 4

### உடலமைப்பு

பிறந்த எண்ணும், விதி எண்ணும் 4 ஆகக் கொண்ட இவர்கள் ராகுவின் ஆதிக்கத்திற்குட்டவராவர். இவர்கள் சற்று உயரம் மிகுந்தவர்களாகவும் சதைப் பற்று குறைந்தும் இருப்பர். இவர்களுக்கு முடி சுருண்டும், மிருதுவாகவும் காணப்படும்.

### மன, குணவியல்பு

இவர்கள் சாஸ்திரங்கள் கற்றவர்களாக இருப்பர். அனுபவமும் கொண்டவர்கள். பேச்சாற்றல், எழுத்தாற்றல் மிக்கவர்கள். இயற்கைக் காட்சிகளை ரசிப்பதில் வல்லவர்களாக இருப்பர்.

மன தைரியமுள்ளவர்கள். தம் கருத்துகளைத் துணிச்சலுடன் வெளியிடும் தன்மையுள்ளவர்.

அதனால் சமுகத்தில் நடக்கும் குற்றங்குறைகளையும் வெளிப்படுத்தும் சீர் திருத்தவாதிகளாகவும் இருக்க அருகதையுள்ளவர்கள்.

சமுதாயம் மற்றும் நாட்டு முன்னேற்றத்திற்குப் பாடுபடுபவர்களாக இருப்பர். கடின உழைப்புக் கொண்டவர்கள். தன்னலம் இவர்களிடம் காண்பதரிது. தன்னலத்தை விட பொதுநலம் கருதியே எப்பணியிலும் ஈடுபடுபவர்களாக இருப்பர்.

இவர்களை எப்போதும் நண்பர்கள் சூழ்ந்தே காணப்படுவர். நண்பர்களின் உதவி இவர்களுக்கு எப்போதும் இருக்கும். இவர்களாலும் நண்பர்கள் நன்மை பெறுவர். இவர்கள் பணத்தைவிட புகழையும், மதிப்பையும் பெருமளவு சம்பாதிப்பவர்களாக இருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

குடும்ப வாழ்க்கையில் இவர்கள் ஈடுபட்டிருந்தாலும் அதில் பூரண திருப்தி கொள்பவர்களாக இருக்க மாட்டார்கள். தன் குடும்பத்தை விட சமூக நலனில் அதிக கவனம் செலுத்துவதால் இவர்களுக்கு சந்தோஷம் இருப்பது கடினம்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் கலைத்துறையில் பேச்சு, எழுத்து போன்ற தொடர்பில் தொழில் மேற்கொள்வர். தரகர்களாகவோ ஏஜெண்டுகளாகவோ கூட இருக்கலாம்.

அது தவிர இரும்பு, கல், வண்டி வாகனங்கள் போன்றவற்றை விற்பனை செய்தல் அல்லது அத்துறைகளில் பணி புரிதல் கூடும். அரசியலில் ஈடுபாடும் நன்மை தருவதாக இருக்கும்.

இவர்கள் பொருள் மீது அதிக ஆசை கொள்ள மாட்டார்கள். இருந்தாலும் பொருள் சேர்க்கையும், வாழ்க்கையில் முன்னேற்றமும் பெறுவர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு உஷ்ண சம்பந்தமான காய்ச்சல், மூலம் போன்றனவும், வயிற்று வலியும் ஏற்படக்கூடும். இவை தவிர, மூட்டு வலி, சிறுநீர் சம்பந்தமான கோளாறுகளும் ஏற்படும்.

### சாதக பாதக எண்களும், திகதியும்

இவர்களுக்கு சூரியன், சுக்கிரன் ஆதிக்கத்திற்குட்பட்ட 1,6 அது தொடர்புடைய எண்களும் யோகமளிப்பவை. அது தொடர்பானவற்றில் யோகமளிக்கவல்ல எண்களில் தம் பெயரை மாற்றிக் கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்கும் இது தொடர்பான எண்களே சிறந்தவை.

இவர்களுக்கு 1,6 தான் யோகமானவை. அது தொடர்பான திகதிகள் யோகம் தரும் நாள்களாகும்.

ஆனால் இவர்கள் சனி ஆதிக்கம் பெற்ற 8 அது தொடர்புடைய எண்களையோ திகதிகளையோ தவிர்ப்பது நல்லது. (தொடரும்)

---

# சிறுபான்மை மக்களுக்கு ஐக்கிய தேசியகட்சி எவ்விதத் தீர்வையும் வழங்கப் போவதில்லை

## கொழும்பு மாநகரசபை பிரதி மேஜர் அசாத்சாலி

(கொழும்பு)

சிறுபான்மை மக்களுக்கான எவ்விதத் தீர்வும் ஐக்கிய தேசிய கட்சியிடம் இல்லையென்றும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் பேச்சுவார்த்தை நடத்தி, தீர்வு காண முடியுமென்றும் ஐக்கிய தேசிய கட்சி செயற்குழுவின் முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயருமான அசாத் சாலி தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதினைந்து இலட்சம் வாக்குகளால் வெற்றி பெறுவாரென்றும் நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய விசேட பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

1994 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராகப் பதவியேற்றதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்க சிறுபான்மை, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை.

ஜே.ஆர்.ஜயவர்தனா, ஆர். பிரேமதாச ஆகியோர் மாத்திரமே சிறுபான்மையினருக்கு பாதகமான செயற்பாடுகளையே முன்னெடுத்து வருவதுடன் கட்சியின் அங்கத்தினர்களை மதிக்காது தன்னிச்சையாக செயற்படுகிறார்.

ஜனாதிபதிக்கும், சரத் பொன்சேவாக்குமிடையில் மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசம் உள்ளது.

எனவே சரத் பொன்சேகா ஒருபோதும் வெற்றிபெறப் போவதில்லை என்று மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

---

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் கொழும்பில் வாக்களிக்க ஏற்பாடு

## தேர்தல் ஆணையகம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வாக்களார்கள் கொழும்பில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது. யுத்தம் காரணமாக அநேகமான யாழ்ப்பாணப் பிரஜைகள் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்து கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வாழ்ந்து வரும் யாழ்ப்பாண மக்கள் கொழும்பிலேயே வாக்களிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எந்தப் பிரதேசத்தில் வசிக்கின்றார்களோ அந்தப் பிரதேசத்தில் தமது வாக்குகளை அளிப்பதற்கு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்க முடியும் எனக் குறிப்பிடப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான வாக்காளர் இடாப்பு வெள்ளவத்தையில் காட்சிப்படுத்தப்படவுள்ளதாகவும் வாக்காளர் இடாப்பு காட்சிப்படுத்தப்படும் இடங்களில் வாக்கெடுப்பில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)




யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற மனித மேம்பாட்டுச் செயலமர்வில் மாணவர்கள் இறைவணக்கம் செலுத்துவதையும் பங்குபற்றிய மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். ( படம்: மந்துவில் நிருபர் )

---

### ஜனாதிபதித் தேர்தலில்

# ஈ.பி.ஆர்.எல். எவ்வின் பத்மநாபா அணி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

ஈ.பி.ஆர்.எல்.எஃப் இன் பத்மநாபா அணி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு தமது ஆதரவுகளை வழங்க முன்வந்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் அரசுடன் இணைந்து செயற்பட்டுவரும் ஈ.பி.ஆர். எல்.எஃப் இன் பத்மநாபா அணி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதாக தெரிவித்துள்ளது.

நாம் மஹிந்தவை நம்ப வேண்டும் அவர் எமக்கு தீர்வை தருவார் என அவர் மேலும் கூறியதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

ஆண்டு முழுவதும் பிரார்த்தனையில் ஈடுபடுவதைவிட ஒரு செடியை நட்டு வளர்த்து வருவது அதிக பலனைத் தரும்.

-துருக்கி

வலம்புரி

# உள்ளூர் உற்பத்திகள் பாதுகாக்கப்பட வேண்டும்

எந்த விடயத்தை மேற்கொண்டாலும் அதில் சாதக, பாதக விளைவுகள் இருப்பது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

கத்தி கையை வெட்டும் என்பதற்காக அதனைப் புறந்தள்ளிவிட முடியாது. அதே போன்றுதான் பல விடயங்கள் உள்ளன.

இதில் சாதக தன்மையின் அளவைப் பொறுத்து நிலைமை தீர்மானிக்கப்பட வேண்டும்.

ஏ-9 பாதை மூடப்பட்டிருந்தபோது அனுபவித்த துன்பங்கள் ஏராளம்.

விமானப் பயணத்தின் மூலமே யாழ்ப்பாணத்திற்கும் வெளி மாவட்டங்களுக்குமான போக்குவரத்து சாத்தியமாயிற்று.

அந்த பயணத்தை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள் வெள்ளவத்தை 'செல்லா' எப்படி என்று.

அட! இராமா இப்படியும் ஒருவரா! என்று விமானப் பயணிகள் முணுமுணுத்ததும் உண்டு. அது மட்டுமா? பயணிகளை தள்ளி விழுத்தக் கூடிய பலசாலிகள் நுழைவாயில் காவலாளிகளாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

பொருட்களை ஏற்றி இறக்குவது மிகையான இலாபத்தை அள்ளிக் கொடுத்தமையால் பயணிகள் புறக்கணிக்கப்பட்டனர்.

இதற்கு மேலாக பேரம்பேசும் கூட்டம் என எல்லாமுமே யாழ்ப்பாணத்து மக்களின் பொருளாதாரத்தை சூறையாடிச் சுகம் கண்டன.

உலகில் பயணிகளை அதீதமாக வரவேற்பதில் விமான சேவை நிறுவனங்களே முதன்மையானவையாக விளங்குகின்றன.

விமானத்தில் பயணிகள் ஏறும்போது இரு கரம் கூப்பி வரவேற்கும் பண்பு சிறப்பானது.

ஆனால் அந்த வழமை யாழ்-கொழும்பு பயண சேவையில் தோல்வி கண்டது.

பலாலி விமான நிலையத்தில் பயணிகள் ஏறுகின்ற போது விமானப் பணியாளர்கள் வேறு கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பர். இந்த துர்ப்பாக்கிய நிலை எங்கள் பண்பாட்டுக் குறைபாட்டின் தோசமாக கருத வேண்டும்.

இப்போதெல்லாம் அந்த நிலைமை மலையேறிவிட்டது.

ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் விளைவு இது. ஏ-9 பாதை திறக்கப்பட்டதனால் 100 வீத நன்மை ஏற்பட்டதெனவும் விவாதிக்க முடியாது.

கத்தரிக்காயை வெட்டிய கத்தி, கையை வெட்டுவது போன்ற சில பழுதுகளும் இருக்கவே செய்கின்றன.

அவ்வகையில் ஏ-9 பாதை திறக்கப்பட்டதை தொடர்ந்து யாழ். குடாநாட்டின் உள்ளூர் உற்பத்திகள் பாதிக்கப்படுவதான செய்திகள் மனதை பிழிகின்றன.

பாதை மூடப்பட்டு யாழ். குடாநாடு அடைபட்ட பிரதேசமாக இருந்த போது எங்கள் இருப்பிற்கு உதவிய உள்ளூர் உற்பத்திகள், ஏ-9 பாதை திறக்கப்பட்டவுடன் அடிபட்டுப் போவதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது.

எனவே உள்ளூர் உற்பத்திகளைப் பாதுகாக்கும் வகையில் தீர்மானங்கள் எடுப்பது எங்கள் உற்பத்திகளையும் வேலைவாய்ப்புகளையும் பொருளாதார ஸ்திரத்தன்மையையும் உறுதி செய்வதற்கு மிகமிக அவசியமாகும்.

## விதாதா வள நிலையத்தின் கணனிப் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞான தொழில் நுட்பவியல் அமைச்சின் அனுசரணையுடன் கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் தெரிவு செய்யப்பட்ட 25 பயனாளிகளுக்கான கணனி பயிற்சி நெறி இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியின் அங்குரார்ப்பண நிகழ்வானது விதாதா வள நிலையத்தில் இன்று உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கி. பாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் பிரதேச செயலர் சி. சத்தியசீலன் இப்பயிற்சி நெறியை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ).

## ஒளிவிழாவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். இளவாலை மாரீசன் கூடல் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் ஒளிவிழாவும் பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளது.

அதிபர் எஸ். றோபேட் உதயகுமாரின் தலைமையில் நாளை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக வலி. தென் மேற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி பி. சிவலிங்கமும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி. ஆர். உதயரட்ணமும், கௌரவ விருந்தினராக வலிகாமம் ஜே. ஆர். எஸ் (J.R.S) இணைப் பாளர் செல்வி பி. சுகன்யாவும் கலந்து சிறப்பிக்க வுள்ளனர்.

நிகழ்வில் மாரீசன் கூடல் பங்குத்தந்தை அருட்பணி எம்.எம். எச். (M.M.H) ஞானேந்திரன் அடிகளார் ஆசியுரை வழங்கவுள்ளார். (ஓ)

## கைலாசபதி நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையால் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு இல 571/15, (றொக்ஸி திரையரங்கிற்கு முன்னால்) காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06 இல் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைமைப் பணிமனையின் கைலாசபதி கேட்போர் கூடத்தில் பேராசிரியர் க.கைலாச பதியின் 27வது ஆண்டு நிறைவுச் சொற்பொழிவும் கவிதா அரங்க ஆற்றுகையும் இடம் பெறவுள்ளது.

மேலும் இந் நிகழ்ச்சிக்குத் தேசிய கலை இலக்கியப் பேரவையின் துணைத் தலைவர் சி.சிவசேகரம் தலைமையுரையையும் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சி.யோகராசா ''பாரதியின் பன்முகப் பரிமாணமும் ஈழத்து இலக்கியமும்'' எனும் தலைப்பில் நினைவுப் பேருரையையும் ''கூடிப்பிதற்றலன்றி ...!'' எனும் தலைப்பில் கவிதா அரங்க ஆற்றுகை கவிஞர் சோ.தேவராஜாவின் தலைமையிலும் இடம்பெறும்.

இதில் கவிஞர்களான சடாகோபன், சுதாகர், மதுவர்மன், விமலாதித்தன், செந்தில்குமார், இதயராசன் ஆகி யோரும் பங்குபற்றவுள்ளனர். (ஓ)

## சபரிமலை ஐயப்பன் கோயிலை தகர்க்க சதி

திருப்பதி கோயிலை தகர்க்க பயங்கரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக ஏற்கனவே மத்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்தது. இதனைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், கடந்த மாதம் 18 ஆம் திகதி திருப்பதியில் சந்தேகத்தின் பேரில் 2 பேரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தினர்.

அவர்கள் நடத்திய விசாரணையில், கைது செய்யப்பட்ட இருவரும் லக்ஷர் இ- தொய்பா பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் அவர்கள் திருப்பதி, சபரிமலை ஐயப்பன் கோயில் உள்ளிட்ட முக்கிய இடங்களை தகர்க்க திட்டமிட்டிருந்ததும் தெரியவந்தது.

அவர்கள் அளித்த தகவலின்படி மேலும் நான்கு பேரை பொலிஸார் கைது செய்தனர். இவர்கள் சபரிமலை ஐயப்பன் கோயிலை தகர்க்க திட்டமிட்டு இருந்தது தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து, கைது செய்யப்பட்டவர்கள் பெங்களூர் பொலிஸார், கேரள உளவுத்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ஓ-6)

# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## அபிஷேகப் பிரியர் சிவபெருமான்

சிவபெருமானை வழிபடுவோர் வசதி படைத்தவர்களாக இருந்தால் கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம் ஆகிய நறுமணப் பொருட்களை ஒன்றாகக் கலந்து சந்தனக் காப்பு செய்யலாம். இது சிவபெருமானுக்கு பொருத்தமான வழிபாடு. இவ்வாறு சிவனைக் குளிர்வித்தால் வழிபாடு செய்பவருக்கு மட்டுமன்றி உலக உயிர்களுக்கும் புண்ணியம் கிடைக்கும்.

தானங்களில் மிக உயர்ந்த தானமாக புண்ணியதானம் கருதப்படுகின்றது. கர்ணன் தனது புண்ணியத்தைப் பகவானுக்கு அர்ப்பணம் செய்ததால் தான் அவன் கெட்டவர்களுக்குத் துணையாக இருந்தும் கூட பகவான் விஸ்வரூப தரிசனத்தைப் பெற்றான். அவனது புகழ் பல்லாயிரம் ஆண்டுகளாக நிலைத்து நிற்கிறது. மேலும், சிவனுக்கு சந்தனக் காப்பு செய்தவர் தேவ வருடத்தில் கோடி வருடங்கள் சிவலோகத்தில் இன்பமாக இருப்பார்கள் என்பது ஐதீகம்.

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ் 100

வழிபாடு என்பது தொடர்ந்து செய்யப்பட வேண்டும். அப்போது தான் எமது மனத்தை நாமே வழிப்படுத்தும் ஆற்றலைப் பெறமுடியும். சைவ நாயன்மார் வாழ்வியல் காட்டும் பட்டறிவு இதுவாகும். சுந்தரர் தனது சுய தேவைகளைப் பெறுவதற்காகவே பல சந்தர்ப்பங்களில் இறைவழி பாட்டை மேற்கொண்டவர். உலகியல் இன்பங்களைப் பெறுவதற்கு இறைவனைப் பாடிப் பணிந்தவர். அதனால் அவருடைய பாடல்கள் உலகியல் வாழ்வுடையாரை ஈர்க்கும் தன்மையான சுந்தரரது இளமை அழகை விரும்பியது. இயற்கையை ரசிக்கும் பண்பு நலனுடையது.

திருத்தலங்களை வழிபடச் செல்லும் கோயிற் சூழலை உன்னிப்பாகக் கவனிக்கச் சுந்தரர் பாடல்கள் ஆற்றுப்படுத்துகின்றன. இயற்கை இறைவன் எமக்கு நல்கிய இனிய கொடையாகும். அதனைப் பார்த்துப் பரவசம் அடையும் போதுதான் இறைவன் எம்மைச் சூழ்ந்திருப்பதை எம்மால் அறியமுடியும். சுந்தரர் உள்ளம் இயற்கையைக்கண்டு பொங்குகிறது. வழிபாட்டிற்காகத் திருவையாறு தலத்திற்குச் செல்லும் வழியிலே இறைவன் அற்புதப் படைப்பான இயற்கையைக் கண்டு எல்லை இல்லாத மகிழ்வடைகிறார். சென்ற வழியை விட்டு அகல முடியாமல் இயற்கைக் காட்சியோடு ஒன்றி நிற்கிறார். "மருவிப் பிரியமாட்டேன் வழி நின்றொழிந்தேன்" என்று தன் மன நிலையை வெளிப்படையாகக் கூறுகிறார். நின்றபடியே நின்று அந்த இடத்தை விட்டு நகர முடியாமல் நிற்பதாகத் தனது நிலையை இறைவனுக்கு எடுத்துக் கூறுகிறார். இது பக்தியின் இன்னொரு படி நிலையாகும்.

இத் தொடருக்குப் பிறிதொரு பொருளும் கொள்ள இடமுண்டு. உலக வாழ்க்கையில் நின்று பிரிய முடியாமல் இருப்பதைக் குறிப்பிடுவதாகவும் இவ்வடி அமைந்துள்ளது. வாழ்க்கைப் பாதையில் இறைவன் நோக்கிய அருட்பயணத்தில் இடையிலே தொடர முடியாத நிலையில் நிற்கும் நிலையைச் சொல்கிறார். பருவிவிச்சி மலைச்சாரலில் பட்டை கொண்டு பகடாடி நிற்கும் காட்சியில் மனம் ஆழ்ந்து போய்விட்டது. மேலும் மலைச்சாரலில் காணும் இன்னொரு காட்சி அவரைக் கவர்ந்திழுக்கிறது. தினைப்புனத்திலே வந்து படியும் கிளிகளை விரட்டும் கன்னியர் அவர்கள் சுருண்ட கூந்தலில் மேல் சூடிய மாலையை அக்கிளிகள் கவர்ந்து ஓடும் காட்சி, கண்ணையும் கருத்தையும் மாற்றி வழியில் நிற்க வைத்துள்ளது. அங்கே அரவத்தோடு திரை நீர் பாயும் காவிரி ஆறு அந்த காவிரியின் கரையில் அமைந்திருக்கும் கோட்டத்தில் உறையும் இறைவன், அவனை சென்று காணவேண்டும் என்று வழி நடந்து வந்த சுந்தரர் இடைவழியில் மனங்கவர்ந்த இயற்கைக் காட்சியில் மயங்கி நிற்கிறார். அவருடைய மனம் தன்னுடைய உண்மையான நிலையை எடுத்துரைக்கவிழைந்தது. ஆறுபாய்ந்தோடும் அழகிய தோற்றத்தை ரசிக்கும் பக்குவத்தில் இறைவனைச் சற்று மறந்து விட்ட குற்றத்தை ஒப்புக் கொள்கிறார். பக்தியின் உயர்வான நிலையும் இதுவே. பிழையை எடுத்துச் சொல்லும் பண்புடைமை சுந்தரரிடம் நாம் கண்டு கொள்ள வேண்டிய விழுமியமாகும். அவரது பாடல் படிக்கின்ற போது எம் மனங்களையும் பக்குவப்படுத்தி விடுகின்றது.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

"மருவிப் பிரியமாட்டேன் நான் வழி நின்று ஒழிந்தேன் ஒழிகிலேன்
பருவி விச்சிமலைச் சாரற் பட்டை கொண்டு பகடாடிக்
குருவி ஒப்பிக் கிளி கடிவார் குழல்மேல் மாலை கொண்டோட்டம்
தரவந்திரைக் காவிரிக் கோட்டத்தை யாறுடைய வடிகளோ"

# உடல் மீது அகல் விளக்குகள் ஏற்றி யோகாசனம்

## காரைக்கால் மாணவர்கள் அசத்தல்



(காரைக்கால்)

கார்த்திகை தீபத்திருவிழாவையொட்டி காரைக்காலில் மாணவர்கள் உடல் மீது அகல் விளக்குகள் ஏற்றி யோகாசனம் செய்து காண்பித்தனர்.

காரைக்கால் கோவில்பத்தில் சண முகா யோகாஸ்ரமம் உள்ளது. இங்கு கார்த்திகை தீபத்திருவிழாவையொட்டி சிறப்பு யோகாசன நிகழ்ச்சி நடந்தது.

மாணவர்கள் யோகாசனம் செய்து கொண்டே தங்கள் உடல் மீது அகல் விளக்குகள் ஏற்றி பார்வையாளர்களை அசத்தினர்.

யோகாசன நிகழ்ச்சியில் 35 மாண வர்கள் சமகோணாசனம், டேபிளா சனம், விபரீதசமகான கிரகசாசனம் உள்ளிட்ட ஆசனங்கள் செய்து காண்பித்தனர்.

இறுதியாக பிரமிட் முறையில் மூன்று மாணவர்கள் ஆசனத்தில் ஈடுபட்டு உடல்மீது அகல் விளக்குகளை ஏற்றி பார்வையாளர்களை அசத்தினர். (ஓ-6)

# கங்கை நதியை சுத்தப்படுத்தி இந்தியா உலக வங்கியிடம் கடன் பெறவுள்ளது

இந்துக்களின் புனித நதிகளில் ஒன்றாக போற்றப்படும் கங்கையை சுத்தப்படுத்த இந்தியா உலக வங்கியிடம் சுமார் ஒரு பில் லியன் அமெரிக்க டொலர் கடனாகப் பெற்றுக் கொள்ளவுள்ளது.

எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் கங்கை நதியை சுத்தப்படுத்தும் பணிகள் முன்னெடுக் கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

உலகில் மிகவும் மோசமாக மாசடைந் துள்ள நதிகளின் பட்டியலில் கங்கை நதியும் இடம்பெற்றுள்ளமை பெரும் துரதிஷ்ட மாகவே கருதப்படவேண்டும். சுமார் 2500 கிலோ மீற்றர் நீளமுடைய கங்கை நதி பல்வேறு வழிகளினால் மாசடைந்துள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது. தொழிற்சாலை கழிவு , பண ணைக் கழிவு உள்ளிட்ட பல்வேறு பொருட்க ளினால் கங்கை நிதி அசுத்தமடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கங்கை நதி முழுவதை யும் சுத்தப்படுத்துவதே தமது திட்டம் என உலக வங்கியின் இந்திய கிளைப் பொறுப் பாளர் ரொபர்ட் சொலிக் தெரிவித்துள்ளார்.

கங்கை நதியில் கழிவுகளை சேரவிடாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பாக 2020 ஆம் ஆண் டில் இதனை நடைமுறைப்படுத்தக் கூடிய சாத் தியம் காணப்படும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கங்கை நதியை அண்டியுள்ள சுமார் 400 மில்லியன் மக்கள் நன்மை அடைந்து வருவதாகவும் தொடர்ச்சியாக மாசடைந்தால் பாரிய ஆபத்துக்கள் ஏற்படக் கூடுமெனவும் சுற்றாடல் ஆர்வலர்கள் எச்சரிக்கை விடுத் துள்ளனர். கங்கை நதியை சுத்தப்படுத்தும் திட்டமொன்று 1989 ஆம் ஆண்டு முன்னெ டுக்கப்பட்ட போதிலும் அது வெற்றியளிக்க வில்லை. (ஓ-6)

# அண்ணாமலையாரை தரிசிக்கவும் செல்வாக்கு இருக்க வேண்டும்

## பக்தர்கள் ஆதங்கம்



திருவண்ணாமலை அண்ணாமலையாரை பணமிருந்தாலும் பார்க்க முடியாது. செல்வாக்கு இருந்தால் தான் பார்க்க முடியும் என்ற நிலை உரு வாகியுள்ளது. தமிழகத்தில் பக்தர்கள் அதிகம் வரும் கோவில்களில் திருவண ணாமலையும் ஒன்று. ஆண்டு தோறும் நடக்கும் கார்த்திகை தீபத் திரு விழாவை காண இலட்சக்கணக்கான பக்தர் கள் குவிகின்றனர். இதற்காக காவல்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் பக்தர்களுக்கு பல வசதிகளையும் செய்து கொடுக்கின்றனர்.

அத்தோடு இவர்கள் பக்தர்களுக்கு சங கடத்தையும் தருகின்றனர். பரணி தீபம், மகா தீபத்தை காண பாதுகாப்பு காரணம் காட்டி சாதாரண பக்தர்கள் யாரையும் கோவிலுக் குள் அனுமதிக்கவில்லை. கோவில் நிர்வாகம் வழங்கிய 500 மற்றும் ஆயிரம் ரூபாய் டிக்கெட் இருக்க வேண்டும். இல்லை என்றால் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் வழங்கப்படும் வி.ஐ.பி. - வி.வி.ஐ.பி., பாஸ் இருக்க வேண்டும்.

ஐ.ஏ.எஸ்., - ஐ.பி.எஸ் அதிகாரிகளின் நேரடி பரிந்துரையில் பொலிஸ் பாதுகாப் புடன் பலர் கோவிலுக்கு அழைத்து வரப்பட்ட னர்.

அண்ணாமலையாரை நேரில் தரிசிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் பணத்தை கொடுத்து டிக்கெட் வாங்கிய பக்தர்களுக்கு இந்த ஆண்டு ஏமாற்றம் தான் மிஞ்சியது.

பரணி தீபத்திற்கு அதிகாலை 12 மணிக்கே நடை மூடப்பட்டது. இதன் பிறகு பக்தர்கள் யாரையும் கோவிலுக்குள் அனுமதிக்க வில்லை. மீண்டும் 2 மணிக்கு நடை திறக்கப்பட்டது.


அப்போது அம்மணியம்மாள் கோபுரம் வழியாக 'டிக்கெட் வைத்திருந்தவர்கள், வி.ஐ.பி - வி.வி.ஐ.பி, பாஸ் உள்ளவர்கள், உயர திகாரிகளின் உறவினர்கள் அனுமதிக்கப் பட்டனர்.

பரணி தீபத்திற்கு மட்டும் பாஸ் வாங்கிய வர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தை தாண்டும். ஒரே நேரத்தில் இவ்வளவு பேர் குவிந்ததால் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பக்தர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர். ஒரு கட்டத்தில் யாரையும் உள்ளே அனுமதிக் காமல் கோபுர வாசலை மூடிவிட்டனர். இதனால் பணம் கொடுத்து பாஸ் வாங்கியவர்கள் ஏமாற் றத்துடன் கால் கடுக்க காத்திருந்து திரும் பினர். (ஓ-6)

# பள்ளி வான் குளத்தில் மூழ்கியதில் 9 குழந்தைகளும் ஆசிரியையும் பலி

(வேதாரண்யம்)

நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே கரியா பட்டினத்தில் தேவி முன்பள்ளி உள் ளது. இந்த பள்ளியில் சுற்று வட்டார கிராமங்க ளைச்சேர்ந்த மாணவ - மாணவிகள் படித்து வரு கின்றனர்.



தினமும் பள்ளிக்கூட வான் கிராமங்களுக்குச் சென்று மாணவ - மாண விகளை ஏற்றிக்கொண்டு பள்ளிக்குக் கொண்டு விடுவது வழக்கம்.

நேற்று காலை சுற்று வட்டாரப் பகுதியைச் சேர் ந்த 25 மாணவ-மாணவிகளை ஏற்றிக் கொண்டு வான் வந்துகொண்டிருந்தபோது கத்திரிபுலம் என்ற ஊர்கோவில் குளம் அருகே திடீர் என நிலை தடுமாறி ஓடியது.

உடனே மாணவ - மாணவிகள் கூச்சல் போட்டனர். வானை சாரதி நிறுத்த முயன் றார். ஆனால் கட்டுப்பாட்டை இழந்த வான் ரோட்டில் இருந்து விலகி குளத்தில் தலைகுப் புற கவிழ்ந்தது.

குளத்தில் தண்ணீர் அதிகமாக இருந்த தால் வான் முழுவதும் மூழ்கியது.வானுக்குள் சிக்கிய குழந்தைகள் அதிகமாகத் தண்ணீர் குடித்ததாலும், மூச்சு திணறலாலும், உயிருக் குப் போராடினர். கிராம மக்கள் ஓடிவந்து வானில் இருந்த குழந்தைகளை மீட்டனர்.

ஆனால் அதற் குள் 9 குழந்தைகள் நீரில் மூழ்கி இறந்து விட்டனர். இதில் 5 பேர் மாணவிகள், 4பேர் மாணவர்கள். பள்ளி ஆசிரியை ஒருவரும் குளத்தில் பிணமாக மிதந்தார். தீயணைப்பு வீரர் கள் விரைந்து வந்து 11 குழந்தைகளை உயிருடன் மீட்டனர்.

வானில் 25 மாணவ -மாணவிகளும், 2 ஆசிரியர்களும் இருந்தனர். 5 குழந்தைக ளையும் ஒரு ஆசிரியையும் மீட்கும் பணி நடந்து வருகிறது.

வான் குளத்தில் மூழ்கியபோது வான் சாரதி கதவைத் திறந்து தப்பி ஓடிவிட்டார்.அவரை பொலிஸார் தேடி வருகின்றனர். ஒரே பள்ளி யைச் சேர்ந்த 9 மாணவ -மாணவிகளும், ஆசிரியையும் பலியாகியுள்ளதால் அந்தப் பகுதியே சோகத்தில் மூழ்கியுள்ளது. (ஓ-6)

# உலகில் உயரமானவர் என்ற சாதனையை இந்தோனேசியா சுபர்வோனா முறியடிக்கவுள்ளார்

## இவரது உயரம் 8.89 அடியாகும்

(ஜகார்த்தா)



இந்தோனேசியாவைச் சேர்ந்த தொழி லாளி ஒருவர் உலகின் மிக உயரமான மனி தர் என கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறவுள் ளார். துருக்கி நாட்டைச் சேர்ந்த விவசாயி சுல்தான் கோசன் என்பவர் தான். தற்போது உலகின் மிக உயரமான மனிதராக உள்ளார்.

இவரது உயரம் 2.41 மீற்றர். இந்த உலக சாதனையை இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் அமைந்துள்ள லாம்பங் மாகாணத் தைச் சேர்ந்த தொழிலாளியான சுபர்வோனா (25) முறிய டிக்க உள்ளார். இவரது உயரம் 2.71 மீற்றர் (8.89 அடி) என அதிகாரப் பூர்வ மற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தோனேசியாவின் சாதனை பதிவுத் துறை மேலாளர் நதாரி கூறிய தாவது ,

எங்கள் குழுவினர் சுபர்வோனாவை இந்தோனேசியாவின் மிக உயரமான மனிதராக அறிவித்துள்ளனர். இவர் இந் தோனேசியாவில் முந்தைய சாதனை யாக இருந்த 2.21 மீற்றர் உயரத்தை முறியடித் துள்ளார். இவரை உலகிலேயே மிக உயரமான மனிதர் என கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்யுமாறு கூறியுள்ளோம். இவ்வாறு நதாரி கூறினார்.

இதுகுறித்து சுபர்வோனா கூறுகையில், சில நேரங்களில் என் உயரத்தை பற்றி பெருமைப் படுகிறேன். ஆனால் அதிக உயரமாக இருப்பது சில நேரங்களில் எனக்கு பிரச்சினையை ஏற் படுத்துகிறது. என்னால் சாதாரண மக்களைப் போல வாழ முடியவில்லை. பஸ்சில் ஏறுவது மற் றும் எனக்கு ஏற்ற உடைகளை தேர்ந்தெடுப்பதில் மிகவும் பிரச்சினை ஏற்படுகிறது என்றார். (ஓ-6)

# பாலூட்டும் போது தாய் தூங்கினார் ; குழந்தை மூச்சுத்திணறி மரணம்

## விமானத்தில் சம்பவம்

(லண்டன்)

அமெரிக்க தலைநகரம் வாஷிங்டனில் இருந்து குவைத்துக்கு விமானம் ஒன்று சென்று கொண்டிருந்தது. இதில் எகிப்து நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் பிறந்து 1 மாதமே ஆன கைக்குழந்தையுடன் பயணம் செய்தார்.

விமானம் பறந்து கொண்டிருந்த போது குழந்தை பசியால் அழுதது. எனவே அவர் பாலூட்டினார். அப்படியே அயர்ந்து தூங்கி விட்டார்.

குழந்தை கீழே விழுந்து விடக்கூடாது என் பதற்காக குழந்தையை இறுக்கி அணைத்த படி பாலூட்டி கொண்டிருந்தார். தூங்கும் போது தன்னை அறியாமலேயே இன்னும் அதிகமாக இறுக்கி அணைத்துள்ளார்.

அவர் கண் விழித்து பார்த்த போது குழந்தை மயங்கியபடி மடியில் கிடந்தது. உடனே விமான ஊழியர்களுக்கு தகவல் கொடுத்தார்.

அப்போது விமானம் இங்கிலாந்து அருகே பறந்து கொண்டிருந்தது. இதனால் லண்டன் விமான நிலையத்தில் அவசரமாக விமா னத்தை தரை இறக்கினார்கள்.

குழந்தையை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். டாக்டர்கள் பரிசோதித்து விட்டு குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினார்கள். (ஓ-6)

# விஸ்வரூபம் எடுத்தார் விரேந்திர சேவாக்; இந்தியா முதல் இன்னிங்ஸில் முன்னிலை

(மும்பை)

விஸ்வரூபம் எடுத்த வீரேந்திர சேவாக் அதிரடி இரட்டைச் சதம் விளாச இந்திய அணி நேற்றைய 2 ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 443 ஓட்டங்களைக் குவித்தது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட், 2 இருபது-20 மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.


இதில் முதலாவது டெஸ்ட் சமநிலையில் முடிபடைய 2-வது போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இந் நிலையில் 3-வதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று முன்தினம் மும்பையில் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்ட நேர முடிபில் 8 விக்கெட்டுக்களையிழந்து 366 ஓட்டங்களை எடுத்தது.

இந் நிலையில் 2 ஆம் நாளான நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 393 ஓட்டங்களை எடுத்துச் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அஞ்சலோ மத்யூஸ் 131 பந்துகளில் (11 பவுண்டரிகள் உட்பட) 99 ஓட்டங்களை எடுத்து ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்து துரதிர்ஷ்டவசமாக ஒரு ஓட்டத்தினால் தனது முதலாவது டெஸ்ட் சதம் பெறும் வாய்ப்பை இழந்தார்.

பந்து வீச்சில் ஹர்பஜன் சிங் 4 விக்கெட்டுக்களையும் பிரக்ஜன் ஓஜா 3 விக்கெட்டுக்களையும் சகீர்கான், சிறிசாந் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.



விரேந்திர சேவாக்

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு முரளிவிஜய்-விரேந்திர சேவாக் ஜோடி பலமான ஆரம்பத்தை வழங்கியது.

இந்த ஜோடியின் அதிரடியான துடுப்பெடுத்தாட்டத்தின் மூலம் இந்திய அணி 19.2 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது. இதில் சேவாக் 54 பந்துகளில் தனது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

மறுமுனையில் முரளிவிஜய் 51 பந்துகளில் தனது முதலாவது அரைச் சதத்தைக் கடக்க இந்திய அணி 29.4 ஓவர்களில் 150 ஓட்டங்களை எட்டியது. இந்த ஜோடியின் அதிரடியான இணைப்பாட்டத்தைப் பிரிக்க இலங்கை அணித் தலைவர் சங்கக்கார களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்தபோதும் பலனளிக்காமல் போக இந்திய அணி 36.4 ஓவர்களில் 200 ஓட்டங்களை எட்டியது.

இதில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய விரேந்திர சேவாக் 101 பந்துகளில் தனது 17-வது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 39.1 ஓவர்களில் 221 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது முரளிவிஜய் 121 பந்துகளில் (10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 87 ஓட்டங்களை எடுத்துக் ஹேரத்தின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து 2-வது விக்கெட்டுக்காகச் சேவாக்குடன் இணைந்த ராகுல் ராவிட் பொறுப்பான ஆட்டத்தை வ்ழங்கினார். இதில் அதிரடியைத் தொடர்ந்த சேவாக் 130 பந்துகளில் 150 ஓட்டங்களைக் கடக்க இந்திய அணி 54 ஓவர்களில் 300 ஓட்டங்களை எட்டியது.

இந்த ஜோடியையும் பிரிக்க இலங்கை அணியின் பந்து வீச்சாளர்கள் பல வழிகளில் உத்தியை மேற்கொண்டும் கைகொடுக்காமல் போக அதிரடி நாயகன் விரேந்திர சேவாக் 168 பந்துகளில் தனது 6-வது இரட்டைச் சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார்.

மறுமுனையில் நிதானமாக ஆடிய ராகுல் ராவிட் 95 பந்துகளில் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்ய இந்திய அணி 68.1 ஓவர்களில் 400 ஓட்டங்களைத் தாண்டியது.

இந் நிலையில் நேற்றைய 2 ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 79 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 443 ஓட்டங்களை எடுத்தது.

இதன் மூலம் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணியை விட முன்னிலையில் உள்ளது.

இதில் விரேந்திர சேவாக் 239 பந்துகளில் (40 பவுண்டரிகள், 7 சிக்ஸர்கள் உட்பட) 284 ஓட்டங்களையும் ராகுல் ராவிட் 121 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 62 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் ரங்கண ஹேரத் வீழ்த்தப்பட்ட ஒரு விக்கெட்டை எடுத்தார். இப் போட்டியின் 3 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.



முரளிவிஜய்

**விரேந்திர சேவாக் சாதனை படைப்பாரா?**

இப் போட்டியில் விரேந்திர சேவாக் முச்சதத்தைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் டெஸ்ட் கிரிக்கெட்டின் 3 முச்சதங்களைக் கடந்த வீரர் என்ற சாதனையைப் படைப்பார்.

## உஷைன் போல்ட் உறுதி தரவில்லை

இந்தியத் தலைநகர் டில்லியில் நடக்கவுள்ள காமன் வெல்த் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்பதாக ஒலிம்பிக் நாயகன் உஷைன் போல்ட் எவ்வித உறுதியும் தரவில்லை என அவரது முகாமையாளர் ரிக்கி ஜிம்ஸ் தெரிவித்துள்ளார்.

டில்லியில் எதிர்வரும் 2010 ஒக்டோபர் 3 முதல் 14 ஆம் திகதி வரை காமன் வெல்த் விளையாட்டுப் போட்டி நடக்கின்றது. இப் போட்டியில் உலகின் மின்னல் வேக வீரரான ஜமெக்காவின் உஷைன் போல்ட் பங்கேற்பார் என காமன் வெல்த் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் சுரேஸ் கல்மாடி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விக்டோரி சிறப்பான பந்து வீச்சு; பாகிஸ்தான் அணி தடுமாற்றம்



(வெலிங்டன்)

டானியல் விக்டோரியின் சுழலில் முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் பாகிஸ்தான் அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 161 ஓட்டங்களை எடுத்தது.

நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது போட்டியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது. இந் நிலையில் 2-வது டெஸ்ட் நேற்று வெலிங்டனில் ஆரம்பமானது.

இப் போட்டி சீரற்ற கால நிலை காரணமாக முதல் நாள் ஆட்ட நேர மதிய போசன இடைவேளைக்குப் பின்பே ஆட்டம் ஆரம்பமானது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித் தலைவர் டானியல் விக்டோரி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு இம்ரான்பர்கத்-சல்மான் பட் ஜோடி பொறுப்பான ஆரம்பத்தை வழங்கியது. எனினும் நடுத்தர வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் பாகிஸ்தான் அணி நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிபில் 58 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 161 ஓட்டங்களை எடுத்தது.

இதில் உமர் அக்மல் 46 ஓட்டங்களையும் இம்ரான் பர்காத் 32, சல்மான் பட் 29 ஓட்டங்களையும் எடுத்தனர். அணித் தலைவர் மொகமட் யூசுப் பூச்சியத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

பந்து வீச்சில் அணித் தலைவர் டானியல் விக்டோரி 3 விக்கெட்டுக்களையும் தொப்பி 2 விக்கெட்டுக்களையும் ஓ பிறின் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். 2 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# இந்திய அணிக்கான அனுசரணை ஒப்பந்தத்தை நீடித்தது சகாரா

(மும்பை)

இந்தியக் கிரிக்கெட் அணிக்கு புதிய ஸ்பொன்ஷர் யாரும் கிடைக்காததால் தற்போதைய சகாராவின் ஒப்பந்தம் மேலும் 6 மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

உலகின் பணக்கார விளையாட்டு அமைப்பாக இந்தியக் கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ) உள்ளது. இதனுடைய இந்திய அணியின் ஸ்பொன்ஷராக தற்போது சகாரா நிறுவனம் உள்ளது. ஒரு போட்டிக்கு 2 கோடி வீதம் சுமார் 400 கோடி ரூபாய் கொடுத்து உரிமை பெற்றிருந்தது.

4 ஆண்டுக்கான இந்த ஒப்பந்தம் எதிர்வரும் 31 ஆம் திகதி முடிபுக்கு வருகின்றது. இதையடுத்து இந்திய சிரேஷ்ட அணி, ஏ அணி, 19 வயதுக்குட்பட்ட அணி மற்றும் பெண்கள் அணிக்கு ஸ்பொன்ஷராக இருக்க விரும்புபவர்களுக்கான புதிய ஏலத்தை பி.சி.சி.ஐ. சமீபத்தில் அறிவித்தது.

குறிப்பிட்ட திகதிக்குள் யாரும் இதில் பங்கேற்காததால் நவம்பர் 31 வரை ஏலத்தை நீடித்தது. ஆனால் மறுபடியும் யாரும் ஏலம் கேட்க முன்வர வில்லை.

இந்திய அணி அடுத்து வரும் 4 ஆண்டுகளில் பங்கேற்கும் 170 போட்டிகள் (டெஸ்ட், ஒரு நாள் மற்றும் இருபது-20) ஒவ்வொன்றுக்கும் பி.சி.சி.ஐ. தலா 3 கோடி ரூபாயைப் ஸ்பொன்ஷரிடமிருந்து எதிர்பார்த்ததால் தான் யாரும் இதில் கலந்து கொள்ள முன்வரவில்லை எனத் தெரிகின்றது.

இதையடுத்து நேற்று முன்தினம் மும்பையில் நடந்த பி.சி.சி.ஐ. சந்தைப்படுத்தல் குழுக் கூட்டத்தின் முடிபில் சகாரா நிறுவனத்தின் ஒப்பந்தத்தை அடுத்து வரும் 6 மாத காலத்திற்கு (2010 ஜுன் வரை) நீடிக்க முடிபு செய்யப்பட்டது.

இதனால் இந்திய வீரர்கள் அணியும் ரீசேட் உள்ளிட்ட ஆடைகளில் சகாராவின் விளம்பரம் தொடர்ந்து இடம்பெற்றிருக்கும்.

## ஐ.பி.எல். தொடரில் பங்கேற்க பாகிஸ்தான் வீரர்களுக்கு அனுமதி

இந்தியாவில் நடக்கும் ஐ.பி.எல்.-3 தொடரில் பங்கேற்க பாகிஸ்தான் வீரர்களுக்கு அந்நாட்டு வெளியுறவு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின் இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் இடையிலான நட்பில் விரிசல் ஏற்பட்டது. இதனால் இரு நாடுகளும் அந்தந்த நாடுகளில் சென்று விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதைத் தவிர்த்து வருகின்றன.

இந் நிலையல் பாகிஸ்தான் வெளியுறவுத் துறை இந்தியாவில் அடுத்த வருடம் மார்சில் நடைபெறும் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்க தனது நாட்டு வீரர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இதையடுத்து வீரர்கள் பாதுகாப்புக் குறித்து உள்துறை அமைச்சகத்தின் அனுமதிக்காக காத்திருக்கின்றனர்.

# பொன்சேகாவுக்கு அளிக்கும் வாக்கு...

கப்படும் என்ற ஜனநாயக மக்கள் முன்னணியினது அரசியல் குழு எடுத்துள்ள முடிபை கட்சியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. கொழும்பில் நேற்று காலை கிராண்ட் ஓரியன்டல் விடுதியில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டின் போது தெரிவித்தார்.

இம் மாநாட்டில் மனோ கணேசன் எம்.பியுடன், கட்சியின் பொதுச்செயலாளர் கலாநிதி நல்லையா குமரகுருபரன், தேசிய அமைப்பாளர் பிரபா கணேசன், ஜ.தொ.கா.பொதுச்செயலாளர் எம்.சிவலிங்கம், கொழும்பு மாவட்ட அமைப்பாளர் எஸ்.இராஜேந்திரன், சிரேஷ்ட உப தலைவர் கங்கை வேணியன், கொழும்பு மாநகரசபை உறுப்பினர் மொஹமட் ஷியாம் ஆகியோர் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் மனோ எம்.பி. தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது,

சரத் பொன்சேகாவிற்கு எந்தவித அரசியல் நிபந்தனைகளுமின்றி வாக்களிக்க வேண்டும் என தமிழ் மக்களை நாம் கோரவில்லை. தமிழ் மக்கள் சரத் பொன்சேகாவிற்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் இன்றைய ஆட்சியை மாற்றும் வாக்குகளாகும்.

யுத்த வெற்றியினை முன்னிலைப்படுத்தி தேர்தல்களில் இலகு வெற்றி பெற்றிடலாம் என இந்த அரசாங்கம் மனப்பால் குடித்தது. ஆனால் யுத்த வெற்றிக்கு காரணமானவரே தேர்தலில் பொது வேட்பாளராக எதிரணியினால் நிறுத்தப்படுவதால் இன்று இந்த அரசாங்கம் அதிர்ந்து போயுள்ளது. இந்த ஆட்சியை மாற்றுவதற்கு இதைவிட சிறந்த வழி எதுவும் கிடையாது.

**கூட்டமைப்பிற்கு அழைப்பு**

இன்றைய ஆட்சியை மாற்றியமைத்து புதிய தேசிய அரசாங்கத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் நமது செயற்திட்டத்திற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வடகிழக்கின் ஐந்து தேர்தல் மாவட்டங்களான யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் வாழும் தமிழர் தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் நடக்கும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் நடத்தப்படும்.

இன்றைய அரசாங்கத்தை மாற்றிவிட வேண்டும் என்ற உணர்வுகள் இன்று வடகிழக்கில் தமிழ் மக்கள் மனங்களில் ஒலிப்பதாக எமக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த உணர்வுகளை எதிரொலித்து ஆட்சிமாற்றம் என்ற ஒரே அடிப்படையில் எதிரணி பொது வேட்பாளர் சரத் பொன்சே காவை கூட்டமைப்பு ஆதரிக்கவேண்டும் என தோழமையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**இன்றைய அரசாங்கம்**

இன்றை அரசாங்கத்திற்கு வாக்களிப்பதற்கு தமிழ் மக்களுக்கு எந்தவொரு காரணமும் கிடையாது.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பிலும், மனித உரிமைகள் தொடர்பிலும் இந்த அரசாங்கம் தமிழ் மக்களிடம் தோல்வி யடைந்துவிட்டது.

சொல்லொணா துன்பங்களை விளைவித்த யுத்தத்திற்கு இந்த அரசாங்கம் அரசியல்-இராணுவம் தலைமையை தந்தது. தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்று சொல்லி தாமே ஆரம்பித்து வைத்த சர்வக்கட்சி கடையை இந்த அரசாங்கமே இழுத்து மூடிவிட்டது.

இன்று இந்த யுத்தத்தையடுத்து தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்கு கிடைத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பத்தையும் இந்த அரசாங்கம் தவறவிட்டுவிட்டது. தேசிய இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் இன்று இந்த அரசாங்கத்துக்குள்ளேயே தமிழ் கட்சிகளுக்கும், சிங்கள தீவிரவாத கட்சிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் முற்றியுள்ளன.

இந்தியாவிடம் ஒன்றும், ஏனையசர்வதேச சமூகத்திடம் ஒன்றும், சிங்கள மக்களிடம் ஒன்றும், தமிழ் மக்களிடம் ஒன்றும் என மாற்றி, மாற்றி பேசி தமிழ் மக்களின் வாழ்க்கையையும், மண்ணையும் அபகரிக்கும் நோக்கம் இந்த அரசாங்கத்தின் அடிப்படை வேலைத் திட்டமாகும்.

இன்று எதையாவது சொல்லி தமிழ் மக்களின் வாக்குகளையும் வாங்கி ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதே இவர்களது நோக்கம்.

இவர்களது ஆட்சி தொடருமானால் பல இனங்களுக்கும், பல மதத்தவர்களுக்கும் சொந்தமான நமது நாடான இலங்கை ஒரே இனத்திற்கும், ஒரே மதத்தவருக்கும் மாத் திரமே சொந்த மான நாடாக விரைவில் மாற்றப்படும். இது ஒன்றே இந்த அரசாங்கத்தின் ஒரேயொரு அரசியல் நிகழ்ச்சி நிரலாகும்.

**13ஆவது திருத்தமும்**
**தேசிய இனப்பிரச்சினையும்**

பொதுவேட்பாளர் சரத் பொன்சேகா 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என பகிரங்கமாக கூறியிருப்பது நல்ல விடயம். இந்த நிலைப்பாடு கூட இதுவரையில் ஆளுங் கட்சியின் வேட்பாளர் கூறவில்லை.

சரத்பொன்சேகா தான் நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பதாக அவரே உறுதியளித்துள்ள காரணத்தினாலே அவர் இடைக் கால ஜனாதிபதியாகும்.

எனவே தொடர்ந்து ஜனாதிபதியாக இருக்கப்போகின்ற இன் றைய ஆளுங் கட்சியின் வேட்பாளர்தான் தமது தீர்வு திட்டத்தை உடனடியாக அறிவிக் கவேண்டும். (ச-5)

## ஆசிரிய உத...

பிரயோகத்தை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன் போது குழப்பம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்ட 5 எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களைக் கைது செய்ததாகவும் ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட கல்வீச்சில் 6 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்ததாகவும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களில் 2 பெண் பொலிஸாரும் அடங்குவதாக அவர் தெரிவித்தார். தங்களை ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்ளுமாறு வலியுறுத்தியே ஆசிரிய உதவியாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த ஒக்டோபர் 6ஆம் திகதி கல்வியமைச்சின் முன்பாக சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டதை அடுத்து தமக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட சம்பள உயர்வு இதுவரை கிடைக்கவில்லை எனவும் இந்த ஆசிரிய உதவியாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (ச-3)

## யாழ். உற்பத்தி...

நடைபெற்ற விசேட மாநாட்டில் யாழ்.விவசாயத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர், கடற்றொழில் நீரியல்வள திணைக்களப் பிரதிப் பணிப்பாளர், தென்னை பனை சுய பொருள் உற்பத்தித்திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் மற்றும் வணிகர் கழகப் பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

இதில் யாழ்.விவசாய கடல் உணவு மற்றும் தென்னை பனை பொருள் உற்பத்திகளை ஊக்குவித்து ஏற்றுமதி செய்வது தொடர்பில் ஆராய்ந்தனர். அத்துடன் ஏற்றுமதி அமைச்சின் அலுவலகம் ஒன்றினை யாழ்ப்பாணத்தில் விரைவில்நிறுவிதமதுபணிகளைமுன்னெடுக்கவும் தீர்மானித்தனர் எனவும் யாழ். அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார். (ச-5)

## இராமாவில்...

சென்றுவர அனுமதிக்கப்பட்டனர். இதனையடுத்து அதிகளவானோர் நேற்று யாழ். நகருக்கு வந்து திரும்பியதை காணக்கூடியதாக இருந்தது. (ச-3)

## இந்தியத்தூதுவர்...

மாறியுள்ள நிலையில் இந்திய அரசாங்கம் தமது ஆதிக்கத்தை இரு ஜனாதிபதி வேட்பாளர்கள் மீதும்பிரயோகிக்க முயல்வதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

சரத்பொன்சேகாவை இந்தியாவிற்கு அழைத்து பேச்சு நடத்திவரும் இந்தியா மறுமுனையில் மகிந்த ராஜபக்ஷவுடனும் இந்திய தூதுவர் ஊடாக கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## அரசியல்...

மாதத்தில் இருந்து மே மாதம் வரையிலும் நாட்டில் இருந்த வெளிநாட்டு இராஜதந்திரிகளில் 99 விகிதமானோர் போரை நிறுத்துவதற்கு முயற்சி மேற்கொண்டிருந்தனர்.

ஐக்கிய தேசிய கட்சியும், ஜே.வி.பியும் வெளிநாட்டு சக்திகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

பொது வேட்பாளரான பொன்சேகாவை வெற்றியீட்ட செய்வதன் மூலம் நாட்டில் ஒரு உறுதியற்ற தன்மையை ஏற்படுத்த மேற்குலகம் முயல்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## முக்கிய பிரமுகர்களுக்கான...

பொன்சேகா முக்கிய பிர முகர்கள் பயன்படுத்தும் பாதையை பயன்படுத்த முற்பட்டபோது அதிகாரிகள் அதற்கு அனுமதிக்கவில்லை.

இது தொடர்பில் பொன்சேகாவின் இணைப்பு அதிகாரியான கேணல் பிரசன்னவிக்கிரம சூரியா விமான நிலையப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்ட போது முக்கிய பிரமுகர்களுக்கான பாதையை பயன்படுத்த பொன்சேகாவுக்கு அனுமதியில்லையென தெரிவிக்கப்பட்டது.

இந்த முடிவு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாஜ ராஜபக்ஷவின் உத்தரவின் அடிப்படையில் எடுக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். அதன் பின்னர் பொன்சேகா பொது மக்கள் பயன்படுத்தும் பாதையூடாக பயணித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே இந்திய அரசியல் தலைவர்களை சந்தித்தப்பின்னர் அவர் இன்று வெள்ளிக்கிழமை நாடுதிரும்புவார் எனவும் அதன் பின்னர் ஐக்கியதேசியக் கட்சியின் கூட்டத்தில் கலந்து கொள்வார் எனவும் பொன்சேகாவின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-5)

## திடீர் விஜயமொன்றை மேற்...

இந்திய அரசின் விஷேட அழைப்பின் பேரில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா அவசர பயணம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக சரத் பொன்சேகா நியமிக்கப்படுவதற்கு இந்தியா கடும் ஆட்சேபனை தெரிவித்தி ருந்த போதிலும் ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி சரத் பொன்சேகாவை பொது வேட்பாளராக அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இந்தியாவிற்கு சென்ற அவர் இந்திய அரசியல் தலைவர்களுடன் பேசுவதுடன் தமிழ் நாட்டுக்குச் சென்று கலைஞர் கருணாநிதியை சந்திப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சந்திப்புக்களை முடித்துக் கொண்டு இன்று மாலை நாடு திரும்பும் சரத் பொன்சேகா நாளை ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டத்திலும் கலந்து கொள்வார். (ச-5)

## இந்திய மருந்துகளின்...

கடந்த மாதம் இந்தியாவிலிருந்து வந்திருந்த மருந்துகள் சோதனை செய்யப்பட்டபோது சில மருந்துக் குப்பிகளில் கண்ணாடித் துகள்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் அவர் கூறுகிறார்.

இந்த விடயம் தொடர்பில் இந்தியாவின் மருந்து கட்டுப்பாட்டு ஆணையம் கவனம் செலுத்தும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதர் தம்மிடம் உறுதியளித்துள்ளதாகவும் நிமால் சிறிபால டி சில்வா கூறுகிறார்.

இந்தியாவிலிருந்து மருந்து உற்பத்தி நிறுவனங்களின் குழு ஒன்று விரைவில் இலங்கை வந்து இங்குள்ள மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுடன் விவாதிக்கவுள்ளதாகவும் இந்தியத் தூதர் தம்மிடம் தெரிவித்ததாக அவர் கூறுகிறார்.

இலங்கையின் மருந்து தேவையில் 70 சதவீதம் இந்தியாவிலிருந்து தான் இறக் குமதி செய்யப்படுகின்றது என்றும் அவை சுமார் 8 பில்லியன் இலங்கை ரூபாய்கள் பெறு மானம் வாய்ந் தவை என்றும்அமைச்சர்தெரிவித்தார். (ச-5)

ஐடியல் அக்கடமி

சீரணிச்சந்தி சண்டிலிப்பாய் | இடைப்பிட்டி காரைநகர் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | பிரதான வீதி மானிப்பாய்

மாணவச் செல்வங்களே!
புதிய ஆண்டு கல்விச் செயற்பாட்டிற்காக எமது நான்கு நிறுவனங்களிலும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் 2010ஆம் ஆண்டின் புதிய வகுப்புகள் 05.12.2009 சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

நேரம்: பிற்பகல் 3.30

யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள எமது ஐடியல் அக்கடமியில் தரம் 6 இற்கான English Medium வகுப்புகளை புதிய ஆண்டில் குதூகலமாக ஆரம்பிக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

ஒழுக்கத்துடனான கல்விச் சேவையே எமது ஐடியலின் தனித்துவம்;
எம்முடன் இணைந்தவர்களுக்குப் புரியும் அதன் மகத்துவம்.

(C-3841) -நிர்வாகி

MA, M.Com, MBA, M.Sc, PG.Dip
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)

மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.

MA இல்: வரலாறு, பொருளியல், அரசியல் விஞ்ஞானம், பொது நிர்வாகம், சமூகவியல், சமயமும் தத்துவமும், தமிழ், ஆங்கில இலக்கியம் மற்றும் Journalism & Mass Communication ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்ய முடியும்.

M.COM இல்: Banking, Commerce, Co-op Management ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்ய முடியும்.

PG Diploma இல்: ஒருவருட கற்கை நெறியாக Journalism & Mass Com, Management, Marketing Management, Hospital Management, N.G.O. Management, Computer Application ஆகியவற்றில் ஒன்றினைத் தெரிவு செய்யமுடியும்.

குறிப்பு: பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

பதிவுகள் முடிவுத் திகதி: 10.12.2009

யாழ். இணைப்பாளர்
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)
T.P. No: 222 8148, 222 3208

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(C-3842)

SUBRA
சித்தன்கேணி- வட்டுக்கோட்டை
இரு இடங்களிலும்
தரம் 1 – முதல் O/L வரை (தமிழ்– ஆங்கில மொழி மூலம்)
புதிய பிரிவு ஆரம்பம்:05.12.2009 சனி காலை 8.00
இடம் பெயர்ந்து தற்போது மீளக்குடியமர்ந்த மாணவர்கட்கு அனுமதி முற்றிலும் இலவசம்.
(4119)

MATHS CENTRE
NELLIADY
A/L DAY CLASS-2010
ஆரம்பம்:05.12.2009
சனிக்கிழமை காலை 8.00 மணி
வழமையான ஆசிரியர் குழு
தரம் 06–11 வரையான புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 05.12.2009
சனிக்கிழமை மாலை 2.30 மணி
M.M.V. ROAD -நிர்வாகி
(C-3825)

நாளை ஆரம்பம்
DAY CLASS
(கலைப்பிரிவு)
காலை–8 மணி
DMI
JAFFNA
(C-3837)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.